# LANKESAN

BY

Y. SRINIVASAN,
TAMIL, ASST. H. H. THE MAHARAJAH'S COLLEGE, PUDUKOTAH

OFFICE OF THE REGISTRAR OF ... MA...
3- OCT 1929

WITH A FOREWORD
BY

K. V. SUBBIAH AYYAR AVL., M.A., L.T., M.R.A.S.,
DISTRICT EDUCATIONAL OFFICER, TINNEVELLY AND ANJENGO.

O-,1FKA,R·g
N29
85574

B... PUBLISHERS ...ADRAS
...29

Price As. 6

# இலங்கேசன்

322 க
894 8 H5

புதுக்கோட்டை
மகாராஜா கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்
Y. சீனிவாச ஐயர்
இயற்றியது.

OFFICE OF THE
3- OC.
MADRAS

K. V. சுப்பையா ஐயர் அவர்கள்,
M.A., L.T., M.R.A.S.
*(Dist. Educational Officer, Tinnevelly & Anjengo)*
முன்னுரையுடன் கூடியது.

பிரசுர கர்த்தர்:
பி. ஜி. பால் அண்டு கம்பெனியார்
புத்தக வியாபாரிகள், ஜார்ஜ் டவுன்
சென்னை

பதிவு] 1929 [விலை அணு 6

KKIR:9
29

THE KESARI PRINTING WORKS
MADRAS

35574

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. இலங்கை | .... | 1 |
| 2. இராவணன் பிறப்பு | .... | 5 |
| 3. தவம் | .... | 8 |
| 4. பிரகத்தன் தூது | .... | 12 |
| 5. மந்தோதரி மணம் | .... | 15 |
| 6. புத்திரப் பேறு | .... | 19 |
| 7. குபேரன் அனுப்பிய தூது | .... | 20 |
| 8. படை எழுச்சி | .... | 23 |
| 9. அளகாபுரிக் கொள்ளை | .... | 25 |
| 10. கைலை எடுப்பு | .... | 27 |
| 11. திக்கு விஜயம் | .... | 31 |
| 12. நட்புப் பேறு | .... | 35 |
| 13. சீதாபஹரணம் | .... | 38 |
| 14. அசோக வனம் | .... | 47 |
| 15. அரக்கனது வீண் முயற்சி. | .... | 50 |
| 16. அசோக வன அழிவு | .... | 54 |
| 17. இலங்கா தகனம் | .... | 56 |
| 18. போர் முழக்கம் | .... | 59 |
| 19. அங்கதன் தூது | .... | 62 |
| 20. இராம இராவண யுத்தம் | .... | 64 |
| 21. விபீஷண பட்டாபிஷேகம் | .... | 68 |

3 OCT 1929

# FOREWORD

It is with great pleasure that I write this brief 'Foreword' to Pândit Y. Srinivasa Ayyar's excellent little book entitled 'Lankesan'. The original source of the book is mainly the Uttara kanda of Sri Ramayana. Though the first six kandams of this Epic are often read by Pandits and their incidents have become the warp and woof of the Puranic lore and religious knowledge of the Hindus, the Uttara kanda is the most neglected and the incidents recorded in it are not well known even to most of the religiously minded Hindus. By publishing this book Pandit Srinivasa Ayyar has done a great and valuable service to the Tamil knowing Public of Southern India. The book is written in very chaste and elegant style and the choice of materials and incidents is really commendable and highly discreet. I am sure its value also as a text-book in schools, specially in the upper forms of High Schools and in College classes, will be greatly appreciated by those that are in charge of the education of the young in this presidency. I wish the Pandit all success in his enterprise and recommend heartily his publication to all lovers of Tamil Literature.

STATION:
TINNEVELLY,
4th May, 1929.

K. V. SUBBIAH,
*District Educational Officer,*
*Tinnevelly and Anjengo.*

உ

ஓம்.

ஐந்துக ரத்தனை யானை முகத்தனை
இந்தினி ளம்பிறை போலு மெயிற்றனை
நந்திம கன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

---

வெள்ளியங் கிரியை மீதே வேரொடு மெடுத்த வீரக்
கள்ளவன் புயநா லைந்துங் கனகமா மவுலி பத்தும்
துள்ளியம் புவிமேல் வீழ வொருகணை தொடுத்து விட்ட
வள்ளலம் புயமே யன்ன மலரடி வணக்கஞ் செய்வாம்.

ஒன்றாய்ப் பலவாய் உளவா யிலவாய் உரைப்போர்க்(கு)
அன்றா யாமா யருவா யுருவாகி மெய்ம்மை
குன்றாத ஞானக் கொழுந்தாய்க் குணமூன் றிறந்து
நின்றா னியாவன் அவனீள் கழல்நெஞ்சில் வைப்பாம்.

ஓம்.

கணபதி துணை

# இலங்கேசன்

## 1. இலங்கை

“அகர முதல வெழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே யுலகு.”

‘எல்லா எழுத்துக்களும் அகரத்தைத் தமக்கு முதலாக உடையன; அதுபோல் எல்லா உலகங்களும் ஆதியாகிய பரம்பொருளை முதலாக உடையன,’ என்று பொய்யில் புலவர் அருளியபடி அநாதி முத்த சித்துருவாகிய முதற்கடவுள் ஒருவர் உளர். அவர், அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்தவர். அவர் சாந்தரும் நித்தியரும் ஸர்வஞ்ஞரும், ஸ்வப்ரகாசரும், நிஷ்களருமாய்,

“அஞ்சலென்ற கரதலமும் கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலியுடையும் அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலந்திகழ்வெண் ணீற்றொளியும் மறிமானும் மழுவும்
பஞ்சடிச்சிற் றிடையுமையாள் ஒப்பனைபா கமுமாய்”.

விளங்குகிறார்.

அவர் சுயேச்சையால் ஆன்மாக்கள் பிறவிப்பெருங் கடலை நீந்திக் கரை கண்டு தம்மையடையும் வண்ணம் அவ ரவர் தியானிக்கும் வகை அவ்வவ்வுருக்கொண்டு அவரவ ருக்கு அருளிச்செய்கின்றனர். பிரமதேவனை முகத்தினும், இந்திரனைத் தோளினும், ஏனையோரை மற்ற உறுப்புக் களினும் படைத்துப் பிரமனுக்குப் பஞ்சாக்ஷரத்தை உப தேசஞ் செய்து சிருஷ்டித் தொழிலை நடத்திவரக் கட்டளை யிட் டருளினர்.

அக்கட்டளைப் பிரகாரம் பிரமன் தன் தொழிலை நடத்தி வருங்கால், பல பூதங்களையும் படைத்தான். அப்பூதங்களில் ஒருவனாகிய இரட்சாமன் வமிசமே இராக்ஷஸகுலம் எனப் படும். அக்குலத்தில் சுகேசன் என்றொருவன் தோன்றி னான். அவனுக்கு மாலியவான், சுமாலி, மாலி என மூன்று புதல்வர் பிறந்தனர். அவர்கள் தவஞ் செய்து பூவயன் பால், தேவராதி திரிபுவனத்துளோர் எவரேனும் தங்க ளுக்கு அமரில்தோற்கவும், தேய்விலாக் காலங்கள் தாங்கள் ஆயுளோடு இருக்கவும் வரம் பெற்று,

‘ஆதி தன்னிடைப் பெற்ற வரத்தினல்
பீதி யின்றிப் பெரும்புவ னங்களை
வாத, பித்த, கபம்என வன்திறல்
ஓது மூவரு மொத்து நலித்தனர்.’

அவர்கள், ஒருநாள், தங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த தொரு இராச்சியம் நிருமிக்கவேண்டி விசுவகருமனை அழைத்துத் தங்கள் எண்ணத்தை வெளியிட்டார்கள் உடனே அச்சிற்பி தனக்குள் ஆராய்வான்:

“ஒரு காலத்தில், ஆதிசேடனும் வாயு தேவனு தத்தம் பலம் அதிகமென்று மாறு கொண்டு, தேவ

சாற்படி மேருவடைந்து சேடன், தன் ஆயிரம் தலை யினாலும் மேருவின் சிகரத்தைக் கவித்துக்கொள்ள, வாயு தன் முழுவலியாலும் முயன்றும் சிகரங்களைப் பேர்த்தெறியக் கூடவில்லை. அது கண்டு தேவர் சேடனைச் சிறிது தலை தூக்கும்படி வஞ்சிக்கவே, வாயு அச்சமயத்தில் மலையின் சிகரத்தைக் கவர்ந்து தென்கடலில் இட்டனன். அவ்விடமே ஆலமனையஇம்மூவருக்கும் நிலையாம் பதியாகும்,' என நினைத்து, சிற்பி, நீடுபுவன மொரு்மூன்றும், அயனும் சிவனும் நெடுமாலும் கூடியமரின் முயன்றாலும் குறுகவரிய அரணினதாய், அமரர்பதியின் அழகின்மிக்கதாய், மதியும் கதிரோனும் தாரகா கணமும் தண்முகிலும் கீழவாகி மேலோங்கிக்கிளர்ந்து பரந்ததாய், மலைகள்போன்ற மணி மாடங்களும், யுகாந்தவெள்ளத்துக்குப் போக்கு வகுத்ததுபோன்ற கோபுரவாயில்களும், பேரிருளை நீக்கும் மணி வேதிகைகள் இருபக்கமும் நிறைந்த நெடுவீதிகளுமமைத்து, இலங்கை எனப் பெயரும் வைத்தான். மற்றும் பல்வகை மண்டபங்கள், கோபுரங்கள், கடைத்தெருக்கள், சித்திரகூடங்கள், சபைகள், செய்குன்றுகள், நடன சாலைகள், யானை குதிரை தேர்களுக்கு நிலைக்களங்கள், வாவி கூவ தடாகங்கள், நந்தவனங்கள், பூந்தோட்டங்கள் முதலியன எல்லாம் அவன் அணிபெற அமைத்தான். இத்தகைய இலங்காராச்சியத்தில் மூவரும் மகிழ்ந்து குடி புகுந்து,

'ஆழித் தோ டற்சிலையர் அளவி லாத பெரும்படையர்,
ஊழிக் காற்றும் தீயும்போல் உலகையழிக்கத் தொடங்கினர்.'

வர்கள் நா கருவறுத்து, வேலையுலகம் பொடிசெய்து, தேவர் கோமா ந் துறந்து, செம்பொன் உலகத்தைக் கக்கொண்டார்கள்.

அதனால் பூலோகவாசிகளும், இந்திராதிதேவர்களும், முனிவர்களும் நடுநடுங்கிப் பிழைக்க வகை யறியாமற் சென்று திருமாலையடைந்து, துதித்துச் சரண் புகுந்தார்கள். அரக்கர்களின் துஷ்டச் செய்கைகளைச் செவியுற்ற திருமால், அவர்களை எதிர்த்து யுத்தம் செய்து, மாலியென்பவனை மாய்த்தார். மற்றை யிருவரும் அஞ்சிப் பரிவாரத்தோடு பாதாளம் புகுந்து, பதுங்கி ஒடுங்கிக் கிடந்தனர். இது நிற்க,

விசிரவசு என்ற முனிவருக்கு இளிபிளை வயிற்றில் ஓர் எழில் மணிப்புதல்வன் தோன்றினன். அவன் வைச்சிரவணன் எனப் பெயர் அடைந்து, அருந்தவம்செய்து, நான்முகனிடம் இந்திரன் இயமன் வருணன் முதலியோர் ஒப்ப உலக பாலகனாகவும், ஒண்ணிதிக்குத் தலைவனாகவும் வரம் பெற்று,

"வரவு போக்கினுன் மனோகதி யுடையது; வானத்
திரவி தேரினும் கடிய(து); ஈரேழுல குள்ளோர்
விரவி யேறினும் வெளியிட மிகுவது; வேகப்
புரவி யில்லது; புட்பக விமானமுங்"

கொடுக்கப்பெற்றுத் தன் தந்தையாரை யடைந்தான். முனிவரும் அவன் பெற்ற வரங்களைக் கேட்டு ஆனந்தித்தார். அவ்வேளை தனபதி, "எந்தையீர், பிதாமகன் பெருவரந்தந்தான். 'இன்ன தானத்திரு' என்றியம்பிலன். ஆதலின், எனக்குகந்த தானம் நீர் அருளுதல் வேண்டும்," என்று வேண்டினன்.

உடனே விசிரவசுவும், "இலங்கைமாநகர் இராக்கதர், முன்னாள் வலங்கொள் ஆழி மாமாயனோடு எதிர் மலைந்து அமரில் கலங்கி, ஓடிக் கீழுலகிடைக் கரந்தார். அலங்கல் மொய்ம்பினாய், அந்நகர் இருத்தி நீ," என்றார்.

உடனே குபேரன் தந்தையாராணைப்படி அவரை யிறைஞ்சித் துதித்துத் தன் பெருங்கிளையோடும் இலங்கைமா நகரடைந்து, யாவருந் தொழுதடி போற்றத் தேவேந்திரன் போல வினிது வாழ்ந்திருந்தான்.

---

## 2. இராவணன் பிறப்பு

ஒரு நாள் பாதலத்திருந்த சுமாலி, தனது புதல்வி கேகசிக்குத் தக்க வரனைத்தேடி மணமுடிக்கும்பொருட்டுச் சந்திரனை யொத்த அழகிய முகத்தோடுகூடிய அக்கேகசியும் உடன் வரப் பூவுலகத்திற்கு வந்தனன்.

அப்பொழுது அழகிய பொன்மயமான மதில் சூழ்ந்த இலங்கைக்கு அதிபனான குபேரன், வேதமோதிய முனிவர்களும், இயக்கர்களும், தேவர்களுந் தன்னைச் சூழ்ந்துவரத் தன் புஷ்பக விமானத்தின்மேல் ஏறிக்கொண்டு, சங்கநிதியும் பதுமநிதியும் இரு மருங்கினும் நின்று ஏவல் கேட்க, நவரத்தினமிழைத்த முடி தரித்துப் பவனி வந்துகொண்டிருந்தான். அதனைக் கண்ட சுமாலி மிக்க பொறாமை கொண்டு, “பாற்கடலிற் பள்ளிகொண்ட மாயவனால் அரக்கர்கள் இழிவடைந்து பாதாளத்திற் பதுங்கிக்கிடக்க, இரத கஜ துரக பதாதியோடு, புலியிருந்த இடத்திற் பசு வசிப்பதுபோல, நம்மால் இழிவாக மதிக்கப்பட்ட குபேரன் அரசனாகி அட்டகாசம் செய்யக்கண்டோமே! இதுவும் காலத்தின் கொடுமையா?” என்று தன்னுள்ளத்துள் எண்ணி, வெறுப்படைந்து தன்னிருப்பிடம் சென்றான்.

பிறகு தன் தமையனாகிய மாலியவானை யணுகி, அவனுடன் ஆலோசித்தான். சற்று நேரத்திற்கெல்லாம் தன்

மகளைத் தன்பால் அழைத்து, "தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் இலக்குமியையொத்த அழகினை யுடையாய், ஒரு குடியிற் பெண் பிறந்தால், அப்பெண்ணால் அவள் தந்தை குலமும் தாய் குலமும் அவள் புக்க குலமும் ஆகிய மூன்று குலமும் விளங்கும். ஆதலால், புலத்தியன் புதல்வனாகிய விசிரவசு மகரிஷியை உனக்கு நாயகனாக நியமித்துக்கொள். அவ்வாறு செய்வாயாயின், ஸ்வர்க்கம், மத்தியம், பாதாளம் என்ற மூவுலகங்களிலும் நம்முடைய குலம் உன்னாலே விளங்கும்," என்று சொன்னான்.

கேகசி, இவ்வாறு மொழிந்ததன் பிதாவின் உரையைத் தலைமேற்றாங்கி, அதனைப் பரிபாலனஞ் செய்ய உள்ளத்தில் உறுதிகொண்டு அரிய ஆரணம் வல்ல புலத்திய புத்திரரான விசிரவசு தவம் செய்துகொண்டிருந்த இடத்தினையடைந்தாள்; முனிவரை அண்மி வணங்கி நின்றாள். முனிவரும் அவளை அன்புடன் நோக்கி, "நீ யார்? இங்கு வந்தது யாது காரணம்? உன் பெயர் யாது?" என்றார். அப்போது அம்மங்கை, "யான் சுமாலி பெற்ற கன்னிகை. என் பேர் கேகசி. யான் இங்கு வந்த காரணம் தாங்களே குறிப்பால் அறிந்திருக்கலாம்," என்றாள்.

உடனே முனிவரும் ஞானதிருஷ்டியால் கேகசியின் மனோபாவமறிந்து, "பெண்ணே, நீ மக்கட்பேற்றை விரும்பி வந்தனை. ஆனால், நீ வந்த வேளை கொடியது. ஆதலால், உன்னிடத்துப் பிறக்கும் பிள்ளைகள் தங்கள் குணங்களினாலும், தேவதேவர்பால் தாங்கள் பெறும் வரங்களின் வல்லமையாலும் கொடியோராய் இவ்வுலகிற்குப் பல துன்பங்களைச் செய்வார்கள்," எனக் கூறினார்.

அது கேட்ட கேகசி, "பெரியீர், உலகில் பெரியோர்கள் (ஆத்மாவை புத்ரநாமாஸி,) 'தந்தை யெப்படி மைந்தன் அப்படி,' என்றுகூறுவார்களே! முனிசிரேட்டராகிய உம்முடைய கிருபையைப் பெற்றவருக்கு உம்முடைய நற்குணங்க ளமையாமல் முற்றிலும் மாறுன துஷ்டப் பிள்ளைகள் உண்டாகலாமோ?" என்று பணிவுடன் வினவினுள்.

இருடி புங்கவரும் கன்னியின் கனிந்த சொற்களைக் காதில் வாங்கி, "காரிகையே, நீ கூறுவது உண்மைதான். இருந்தாலும், வேளை கொடியது. ஆனுல், உன்னுதரத்துப் பிறக்கின்ற மைந்தர்களில் இளையவன் பேரறிவுடையோனுவான்," என்று பல உண்மைகளை எடுத்துக் கூறிக் கேகசியை மணந்துகொண்டார்.

சில நாட்கள் செல்ல, பத்துத் தலைகளும் இருபது தோள்களும் உள்ளவனுய்ப் பூமியைக் கையிலெடுக்கும் ஆற்றலுடன் இராவணன் வந்து உதித்தான். அவனுடன் பிறந்தோர்கள் கும்பகர்ணன், விபீடணன், சூர்ப்பநகை என மூவர். கும்பகர்ணன் குடம்போன்ற காதையுடையவன்; மிகுந்த பசியுடையவன்; பிறைபோன்ற வக்கிரதந்தமும், குகைபோன்ற வாயும், பெரிய கண்களுமுடைய பயங்கரமான ரூபமுடையவன். சூர்ப்பநகை முறம்போன்ற நகத்தை யுடையவள். அந்நகத்தி னளவுக்கு ஏற்ற இடையும் கழுத்து முடையவளாய் வடிவத்தால் மாத்திரம் பெண்ணுகப்பிறந்தாள். விபீடணனே முனிவர்மொழிப்படி தாயின் இராக்ஷஸத்தன்மையின்றித் தந்தையார்க்குத் தக்க மகவாய் உத்தம குணங்களுடன் பிறந்தான்.

இராவணன் காலக்கிரமத்தில் வளர்ந்து பெரியோனுகி மனுதருமசாஸ்திரமும், வேதவேதாங்கங்களும், மற்றுமுள

சகல கலைகளும் கற்றுணர்ந்தான். ஆனால் கொடிய பாம்புக்குப்பாலும் நெய்யும் பரிந்தளிக்கினும் கொடுவிடமே விருத்தியாவதுபோல, நற்புத்தியின்றித் துர்ப்புத்தியே மிகுந்து, பேதைமை என்னும் வித்திற் பிறந்து, பின் வினைகள் என்னும் வேதனை மரங்கள் நாறி, வேட்கை வேரூன்றி, காதலும் களிப்பும் என்னும் கவடு விட்டு, அவலம் பூத்து, மாதுயர் இடும்பை காய்த்து, மரணமே கனிந்து நின்றான்.

---

## 3. தவம்

நாட்கள் பல செல்ல, ஒரு நாள் ஏதோ ஒரு காரியமாகப் பாதாளம் வந்த குபேரனைக் கேகசி கண்டாள்; உடனே தன் மகனை இராவணனை யழைத்துக் குபேரனைச் சுட்டிக்காட்டி, "அருமந்த மகனே, நின் தமையனான குபேரன் தன் தவப்பேற்றினாலே அழகும் தெய்வத் தன்மையும் பொருந்திய புஷ்பக விமானமும், தேடுதற்கரிய சங்கநிதி பதுமநிதிகளும் பெற்று, நின் மூதாதைகள் முன்பு ஆண்ட இலங்காபுரியை இப்போது ஆள்கின்றான் காண்!" என்று அதனைக் கைக்கொள்ள அவனுக்கு ஊக்கமுண்டாகுமாறு குறிப்பாய்க் கூறினாள்.

கூறினதுதான் தாமதம்; இராவணன் மனமடங்காச் சினங் கொண்டு, பற்களினால் உதட்டைக் கடித்துத் தன் தாயை நோக்கி, 'அன்னாய், யான் கடுந் தவஞ் செய்து இக்குபேரனுக்குச் சமத்துவமான நிலையையாவது மேலான பதவியையாவது பெறுவேன்!" என்று உறுதி மொழி புகன்று, மரவுரி உடுத்துச் சடைமுடி தரித்து, அரியும் வெங்

கரியும் பயமின்றித் திரியும் இமய மலைச் சாரலில் உள்ள கோகர்ணுச்சிரமத்தைக் குறுகினான்; குறுகி,

"ஆசில்நான் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின் படியும்எழுத் தைந்தும் கூறிப்
பூசினன் வடிவமெல்லாம் பூதியால்."

"ஈண்டுதன் கருத்தினோ (டு) இயைந்த மாதவம்
பூண்டிள மதிமுடிப் புண்ணி யன்றனை
வேண்டிய ஆறெலாம் விருப்பொ(டு) உன்னினான்."

"தோய மேதனக் காகா மாகவும் தூக்கும்
வாயு வேயுண வாகவும் மன்னுபே ரறத்தை
நேய மாகியும் நிராசன னாகியும் நியமம்
சாய்விலாது........................."

"ஒருதாளின் மிசைநின்று நின்ற தாளின்
ஊருவின்மேல் ஒருதாளை ஊன்றி ஒன்றும்
கருதாமல் மனமடக்கி விசும்பி னோடும்
கதிரவனைக் கவர்வான்போல் கரங்கள் நீட்டி,"

"அங்கியால் அங்கியை வெதுப்பி, வெம்மையைப்
பொங்கிய வாயுவாற் போக்கி, மெய்ச்சிரம்
தங்கிய அமுதினால் தண்ண னும்படி
இங்கிதத் (து) ஒடுக்கினன் இதயந் தன்னையே."

இவ்வாறு இராவணன் கடுந்தவ மியற்றிக்கொண்டிருக்க, ஆண்டுகள் ஓர் ஆயிரம் கழிந்தன.

"ஓரா யிரம்ஆண் டுபவசித்துக் கழிந்தால் ஓரோர் தலையாகச்
சீரார் சிரம்ஒன் பதுந்தடிந்து செந்தீ யிடைஓ மம்புரிந்து
பேரா உபவா சத்தினனாய்ப் பின்பும் ஓரா யிரத்தாண்டில்
தாரார் மற்றைத் தலைதடிய லுற்றான் பற்றித் தசக்கிரிவன்."

அன்னகாலே உலகம் யாவையும் படைக்கவல்ல கடவுளாகியநான்முகன் அத்தவத்தினுக்கிரங்கி யவன்முன்தோன்றினன். தசக்கிரீவனும் நான்முகன் தன்னெதிரில் நிற்பதைக் கண்டு அவரது அடிகளில் தன் முடிபட வணங்கிக் கைகுவித்து நின்றனன். நின்றவனை நோக்கிக் கலைமகளின் காதலன், "தசக்கிரீவ, நின் அரியதவத்திற்கு மெச்சினோம். தவத்தில் உன்னை நிகர்ப்பவன் நீயேயன்றி வேறொருவனுமிலன். உன்கையால் நீயரிந்து ஓமஞ் செய்த தலைகளெல்லாம் பண்டுபோல் முளைத்திடுக," என்னலும், தலைகள் முன்பு இருந்ததைக்காட்டிலும் பன்மடங்கு எழிலுடன் கிளர்ந்தன. பின்னும் பிரமன், "அருந்தவத்தோய், நீ கேட்ட கேட்ட வரங்களையெல்லாம் உவந்தளிப்பேன். கேட்பாயாக," என்றான். தசமுகன், தனது நன்மைக்கு வேண்டிய பல வரங்களையும் பெற்றுக்கொண்டு, அசுரர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விச்சாதரர், கந்தருவர், நாகர் முதலிய தேவ கணங்களாலும், சிங்கம் முதலிய பிராணிகளாலும் சாவில்லாதிருக்கும்படி வரங் கேட்கக் கஞ்சமலர்க்கடவுளும் அவற்றை விருப்புடன் அளித்தான். அவற்றைப் பெற்றுக்கொண்டு இராவணனும் தன் பிதா வசிக்கும் வனத்தை யடைந்தான்.

நிற்க, இராவணன் அடைந்த வரம், ஆண்தன்மை முதலியவற்றைக் கேள்வியுற்றுக் களிபெருவகையெய்திய மாலியவான் சுமாலி முதலிய இராக்கதர்கள் காற்றுப்போல் கடுகி நடந்து இராவணனைக் கட்டித் தழுவி மிகுந்த சந்தோஷ மடைந்தார்கள். இதுவே தக்க சமயம் என நினைத்துச் சுமாலி தன் மனக் கருத்தை யெல்லாம் வெளியிடத் தொடங்கித் தாங்கள் கடல்வண்ணனுக்குப் பயந்து

முதுகிட்டோடிப் பாதாளம் புக்கு வதிந்திருந்ததையும், முன்பு தங்களால் அரசாளப்பட்ட இலங்கை நகரில் குபேரன் புகுந்து அரசாட்சி செய்தலையும் மனஞ் சகிக்காமல் இராவணனுக்கு எடுத்துக் கூறினன்.

மற்றும் சுமாலி, "நங்கள் குலம் சிறப்படையும்படி நீ தோன்றி மிக்க வலிமையுடையவனாய்ப் பற்பல வரங்களும் பெற்றிருக்கின்றனை. இத்தகைய சிறப்புடைய நீ நமக்குப் பண்டைக்காலந்தொட்டு உரிமையாயுள்ள இலங்கையைக் கைக்கொள்ளாவிடில் நம் குலப் பகைவராகிய வானவர் நகைப்பர்," என்றும் கூறினன்.

இவ்வுரைகளைச் செவியேற்ற இராவணன், "நேரே எனக்குத் தமையனான குபேரன்பால் நான் சினந்து கொள்ளுமாறு எங்ஙனம் ஆகும்?" எனலும், மாதுலனாகிய பிரகத்தன் தன் மருகனை நோக்கி, "சூரத்தன முடையோர் முறைமையை நோக்குவார்களா? சண்டையில் உறவேது? முறையேது? முன்பு நடந்த தேவாசுர யுத்தத்தில் ஒரு தகப்பன் வயிற்றுப் பிறந்தவர்களாயினும் தேவர்கள் விண்டுவைத் துணைகொண்டு தங்களுடன் பிறந்தவர்களாகிய அசுரர் கூட்டத்தை ஒழிக்கவில்லையா?" என்று இராவணனுக்குச் சமாதானங் கூறினன்.

இவ்வாறு மாமன் கூறியவற்றை அங்கீகரித்து, அதன்படி செய்யவேண்டுவது அவசியமெனக் கொண்டு, இராவணன் அவனை நோக்கி, "நீயே சென்று குபேரனிடம் வேண்டியவற்றைச் சொல்லி, அவனது எண்ணத்தை யறிந்து வா," எனப் பிரகத்தனும் புறப்பட்டான்.

---

## 4. பிரகத்தன் தூது

பிரகத்தன் இராவணனிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுச் சீக்கிரமாகச் சென்று, மலைபோன்றுயர்ந்த அழகிய மண்டபங்களையும் வீடுகளையும் கோபுரங்களையுமுடைய இலங்கையை யடைந்து, செல்வத்திற்றனக்கு ஒப்பும் உயர்வுமற்ற குபேரனை யடைந்து வணங்கி நின்றான். குபேரன் அவனை வரவேற்று, "நீ யார்? எங்குநின்று எம்மிடை வந்தாய்?" என, தூதுவன், "அளவில் செல்வமுடையாய், யான் ஒரு தூதன். நின் தம்பி தசக்கிரீவனால் அனுப்பப்பட்டவன். அவன் உரைத்தவற்றைக் கேளாய்: 'முன்னாளில் இலங்கையை ஆண்டுவந்தோர் மாலியவான், சுமாலி, மாலி என்ற மூவருமேயாவர். பின்பு அவ்விலங்கையை ஆளுதற்குரியவன் யானே யன்றி மற்றையாவரும் ஆகார். ஆதலால், என் உறவு வேண்டுமாகில் என்னிடம் வந்து நட்புக்கொண்டு வழிபட்டு இலங்கா நகரத்தை என்னிடம் கொடுக்க வேண்டும்,' என்று உனக்குச் சொல்லும்படி சொன்னான்," என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட நவநிதிகளுக்குத் தலைவன் மேல் நடக்கும் காரியங்களை ஆலோசித்துப் பிரகத்தனை நோக்கி, "தூத, எனது அரசுரிமையும் நகரமும் என்னுடைய தம்பியினுடையன அல்லவா? எனக்கு ஆகவேண்டுவதென்னை? தம்பியின் அனுமதிப்படியே செய்வேன்," என்று கூறி யவனை யனுப்பிவிட்டான்.

சிறிது நேரம் யோசித்து, பின்பு, குபேரன், தன் பிதாவிடம் சென்று, பிரகத்தன் கூறிப்போந்ததை ஆதியோ

டந்தமாகக் கூறினன். வேத வித்தகராகிய விசிரவசு, "மைந்த, துன்மதியுடையோனுகிய தசக்கிரீவன் என்னிடம் வந்து பல தடவை இலங்கையானது தனது மாதாமகனுல் ஆளப்பட்டது என்று சொல்லியிருக்கிறுன். ஆனல்,

'செல்வம்வந் துற்ற காலை தெய்வமும் சிறிதும் பேணுர்;
சொல்வன அறிந்து சொல்லார்; சுற்றமும் துணையும் நோக்கார்
வெல்வதே கருமம் அல்லால் வெம்பகை வலி(து) என்று எண்ணுர்
வல்வினை விளைவும் ஓரார்; மண்ணின்மேல் வாழு மாந்தர்.'

என்ற ஆன்றோர் வாக்கின்படி, 'நீ பழிப்பான காரியம் செய்கிருய். அப்படிச்செய்தல் கூடாது,' என்று நான் சொன்னல் அவன்கேளான். நான் அவனுக்கு இதம் செய்பவன் என்று கருதான். நீ அவனுக்கு உறவினன் என்றும் எண்ணுன். ஆதலால், நான் சொல்லுவதைக் கேட்டு, அதன்படி நட. திசைமுகனளித்த வரத்தின் வலிமையால் பலதிக்குகளிலும் அபகீர்த்தி பரவும்படி உலகத்தைத் தசமுகன் வருத்தி வருகின்றுன். அவனிடம் இலங்கையை ஒப்பித்து வருவாயாகில் உலகில் உன் கீர்த்தி விளங்கும். இராவணன் கொடியோன். ஆதலின், சிறிதுந் தாமதமின்றி இலங்கையை அவன் கையில் ஒப்பித்துவிட்டுப் பர்வத ராஜன் என்ற பெயரை யுடையதும், மயில்போலும் சாயலுடைய உமா தேவியை மகளாகவுடையதும், அம்மலை மகளோடு சிவபிரான் எழுந்தருளியிராநின்ற கைலையங்கிரியை ஒருபுடையுடையதும், கங்காநதி தன்னிடத்துத் தவழ்ந்து செல்லப் பெற்றதுமான பல வகைச் சிறப்பினையும் அழகினையுமுடைய இமயமென்று சொல்லப்படும் மலையை உன் சுற்றத்தாருடனே அடைவாய். அடைந்து, அவ்விடத்தே

யொரு நகரமமைத்து, அதில் சகல சம்பத்துடனும் தங்குவாயாக," என்ருர்.

உடனே குபேரன் இலங்கையை யப்பொழுதே கைவிட்டுத் தனது சுற்றத்தாரோடும் புஷ்பக மீதேறி இமய மலையை யடைந்தான். ஏனென்ருல்,

'கொம்புளதற் கைந்து; குதிரைக்குப் பத்துமுழம்;
வெம்புகரிக்(கு) ஆயிரந்தான் வேண்டுமே;—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.'

என்றதை அவன் நன்கறிந்தான் போலும்.

இவ்வாறு துஷ்டனைக்கண்டு தூர விலகிய ஒண்ணிதித் தலைவன் கைலாயமென்றும் ஹேமகூடமென்றும் கந்தமாதனம் என்றும் பல பெயர்களையுடைய மலையைத் தனக்குகந்த வாசஸ்தானமாகக் கொண்டான். இவ்விடத்தில் குபேரன் பிரமனல் முடி சூட்டப்பெற்று, யக்ஷர், கந்தர்வர், ரிஷிகள் முதலியோர் சூழத் தனி யரசு செலுத்திவந்தான். அவனது பட்டணத்திற்கு அளகாபுரி என்றுபெயர். நந்தனவனம், சைத்திரரதம் என்ற பூந்தோட்டம், மந்தாகினி நதி, ஜாம்பூநதசரஸ் என்ற ஏரி, நவரத்ன கசிதமான சபையோடு கூடிய அரண்மனை—இவைகளோடு கூடிய அவ்வணி நகரில் குபேரன் தேவர்களோடு சகவாஸஞ்செய்து, சிவபிரானிடம் நட்புப்பூண்டு, 'எம்பிரான் தோழன்,' என்ற சிறப்புப் பெயருங்கொண்டு செவ்வனே வாழ்ந்து வந்தான்.

## 5. மந்தோதரி மணம்

இராவணன் சேனைக்கடல் தன்னைச் சூழ்ந்துவர, இலங்கையை யடைந்து, சகல சம்பிரமங்களுடன் மந்திரிகள் முடி சூட்ட, சிறந்த இரத்தினங்க ளிழைக்கப்பட்ட மண்டபத்தில் மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான். பல நாளாய்ப் பாதாள வாசிகளாயிருந்த இராக்கதர்க ளெல்லோரும் இழந்த பொருளை மீட்டு மடையப்பெற்றவர்களாய், அளவிலா ஆனந்த ஆரவாரத்தோடு தங்கள் பழமையான வாசஸ்தலத்தையடைந்து, தங்கள் குலாசாரத்தை முன்னையினும் பன்மடங்கு அதிக உற்சாகத்தோடு நடத்திவந்தார்கள்.

இவ்வாறிருக்கும் நாட்களில் ஒருநாள், அரசதருமப்படி இலங்காதிபனும் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அரசனாணைப்படி, இரும்பையொத்த நிறமும், சுருண்ட குஞ்சியும், நெறிந்த புருவமும், சிவந்த கண்களும், மலையொத்த மார்புந்தோளும், விற்பிடித்தகையும், இடியஞ்சு மொழியும், முறுக்கு மீசையும், கச்சு வீக்கிய அரையும் உடையராய்க் கவசமணிந்து, அரக்கர் பலர், ஆயுதவகைகள் அளவிறந்தன கைக்கொண்டு, சங்கிலிகள் பிணித்த சதகோடி சுணங்கன்கள் உடன்சூழ, இராவணன் நால்வகைச் சைனியமும்புடைவரச் சென்று சிங்கம், புலி, கரடி, யானை, மான், பன்றி முதலிய வன விலங்குகளை வேட்டையாடி முடித்து, அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி பணமும் காசும், அணியும் மணியும் அழகுடன் அளித்து விடை தந்தனன். அவர்களும் தத்தம் இடம் சென்றனர். அரக்கர் கோனும் ஓர் அமைவிடம் உற்று அமைதியுட னிருந்தனன்.

ஆங்கே அசுரத்தச்சனும் சிற்பசாஸ்திரம் செய்தோனு மான மயன் என்பான், தன் ஓர் அழகிய மகளோடுமெதிர் தோன்றினன். அவனைக் கண்ட இராவணன், "நீ யார்? இக்கன்னியுடன் இவ்வனத்தில் வரக் காரணம் என்னை?" என்றான்.

மயன், "மாலையணிந்தநெடிய தோள்களையுடையானே, யான் ஓர் அசுரர் தலைவன்; மயன் என்ற பெயர் உடையேன். இலக்குமிக்கு ஒப்பான அழகினையுடைய தருச்சனை யென்ற ஒரு கன்னியைத் தேவர்கள் உவந்தளிக்க யான் ஏமபுரி யென்ற பட்டணத்தை நிருமாணித்துக்கொண்டு, அதில் அவளுடன் இன்புற்று வாழ்ந்துவர, எங்களுக்குப் பிறந்த குழந்தையாகும் இதோநிற்கின்ற இக்கன்னி; மந்தோதரி எனும் நாமம் உடையாள். இவள் குணங்களுக்கும் அழகினுக்கும் தகுந்த நாயகன் ஒருவனைத் தேடி எங்கு மகப்படாமல் இவ்வனத்திடைப் புகுந்தேன்.

'பெண்பேசுங் காலைப் பிதாவிரும்பும் வித்தையே;
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்;—மண்ணின்மிசைக்
கூறியநற் சுற்றம் குலம்விரும்பும்; காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.'

என்றபடி உயர் குடிப்பிறப்பு, அழகு, கல்வி, ஐசுவரியம் இவையெல்லாம் நிறைந்த மருமகன் இல்லாத இவ்வுலகத்தில் பெண்களைப் பெறுதல் போல வேறு துன்பமுண்டோ? உன்னுடைய மிக்க வழகினையும் இளமையையும் பற்றிக் கேட்கவேண்டா. உனது வமிசம், ஊர், பெயர், கல்வி முதலியவற்றைப்பற்றிச் சற்றுக் கூற வேண்டுகிறேன்," என்று பணிவுடன் பகர்ந்தான்.

அது கேட்ட அவுணர் கோமான், "யான் பிரமதேவன் கொள் பேரன். அழகிய இலங்கை நகரையாளு மரசன். எனது பேர் தசக்கிரீவன் என்பது; நான் எண்ணிறந்த வேதவேதாங்கங்களையும் அறிந்தவன்," என்றான். இதனை மகிழ்ச்சியுடன் கேட்ட மயன், "யான் இதுகாறும் என் மகள் மந்தோதரியை வீட்டில் வளர்த்து வைத்துக்கொண்டிருந்ததன் பிரயோஜனத்தை யடைந்தேன்! அடைந்தேன்!" என்று களிப்புக் கடலில் ஆழ்ந்தான். திருமணத்திற்கு ஒரு நல்ல நாளும் குறிப்பிடப்பட்டது. அந்தச் சுப தினத்தில் மயன், மற்ற முக்கியமான அசுரர்கள், பிரகத்தன் முதலான மந்திரிகள், விசிரவசு, சுக்கிராசாரி முதலிய முனிவர் ஆகிய எல்லோரும் வந்து கூடி மன்றலுக்கேற்படுத்திய நல்லோரையில்,

'கள்ள றுமலர் நாற்றிளண் காவதம்
உள்ள கன்ற ஒளிர்மணி மாடத்தின்
பிள்ளை மான்நிகர் நோக்கியைப் பெய்கழல்
வள்ள லோடும் மணத்தவி சேற்றினர்.'

மயன்,

'கமல மீதுசெங் காந்தள் அலர்ந்தெனக்
குமரன் அங்கையில் கோல்வளை செங்கைவைத்(து)
இமைய மாதும் இறைவனும் போல வாழ்(து)
அமைதிர் என்ன அரும்புனல் நல்கினன்!'

எண்டிசையில் உள்ளோரும் வந்துகூடி ஆசீர்வதிக்க, இராவணன் தன் அரக்கர்கூட்டம் தன்னைச்சூழ்ந்து ஆரவாரிக்க, வண்டு மொய்க்கப்பெற்ற கூந்தலையுடைய மந்தோதரியை மணம்புரிந்தான். மயன் தன் மருகனுக்கு மிகுந்தவல்லமையுள்ள வேலாயுதம் ஒன்றைக் கொடுத்தான்.

இராவணன் தன் மனைவியை யுடனழைத்துக்கொண்டு தோள்களிருபதும், சுடர் முடி தரித்த சிரங்கள் பத்தும் விளங்க, வாள் வீரர் சூழ்ந்து வரத் தன் வள நகரடைந்தான்.

பின்பு, தசக்கிரீவன் தன் காதலியுடன்,

“ மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
காசறு விரையே, கரும்பே, தேனே,
அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,
பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய்,
நாணின் பாவாய், நீணில விளக்கே,
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வீ,
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ ?
தாழிருங் கூந்தல் தையால், நின்னை.”

என்று அவளுடைய நலங்களை நவின்றும்; பங்கயம், குவளை ஆம்பல், படர்கொடி வள்ளை, நீலம், செங்கிடை, தரங்கம், நண்டு, சினை வரால், ஆமை நிறைந்து நன்மணங் கமழும் தெண்ணீர்க்கயங்களிற் புனலாடியும்; தென்றல் உலாவும் சிங்கார வனங்களில் மல்லிகை, முல்லை, மணமுள்ளரோஜா, குரவம், வகுளம், கோங்கு, வேங்கை முதலான பன் மலர் கொய்தும்; செய்குன்று, பளிக்குப்பாறை, நிலா முற்றம், நானம் பனிநீர் அகிற்புகை இவை ஒருங்கே கமழப் பெற்ற மாடமாளிகை முதலியவைகளில் பல வண்ணமாய் இன்பம் நுகர்ந்தும் வாழ்ந்து வந்தான்.

## 6. புத்திரப் பேறு

இவ்வாறு இனிது வாழுங்கால்,

'பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்(று)
என்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்(கு)அளையுந் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை இங்(கு) இல்லா தவர்.'

என்றபடி, கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், இலங்கை யரசாட்சியும், மனை மாட்சியும் நிறைந்து விளங்கும் இலங்கேசனுக்குப் புத்திரச் செல்வமும் ஏற்படும் காலம் சமீபித்தது. மந்தோதரியும் கருவுற்று, உடல் சந்திரனோடு ஒப்ப விளர்த்துத் தோன்ற, மணாளன் மகிழ, ஓர் ஆண் மகவைப் பெற்றாள்.

பிறந்ததும் அப்புதல்வன், 'மேகங் கர்ச்சித்ததோ!' எனும்படி வாயைத் திறந்து பலத்த குரலுடன் அழுததால், இராவணன் தன் புத்திரனுக்கு மேகநாதன் என நாமகரணஞ் செய்தான். குழந்தையும் இளம்பிறை போன்ற வஜ்ர தந்தத்தையும், குகைபோன்ற பிளந்த வாயினையும், பெரிய மலைபோன்ற கரியவடிவத்தையும், சுழலுங்கண்களையும், வலியதோள்களையும், கழலணிந்த கால்களையும் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும், நாழிக்கொரு வீரமுமாக வளர்ந்துவந்தான். செவிலித்தாய்களும் சிறு நெருப்பைச் சருகிட்டுப் பெரு நெருப்பு ஆக்குவது போல, மேகநாதனை சிறு தீயை மிகுந்த சுவையுள்ள மாமிஸம் முதலிய சருகுகளையிட்டுத் திரிலோகங்களையும் எரித்துவிடவெண்ணி வளர்த்தார்கள். அவனுக்குப் பின் அதிகாயன், அக்ஷகுமாரன் என்ற இருவர் பிறந்தனர். இரா

வணன், சேறளைந்த மென்சீறடித் தளிரோடும், தீம்பாற் சோறு அளைந்த கைத்தாமரையோடும், செந்துகிர்வாய் ஊறுநீர் நனைமார்பினேடும், இளமகார் உந்தி ஏறும் இன்பம் துய்த்தும், அரிகொள் பொன்புனை கிண்கிணி தண்டை அணிந்த தருணமென் தளிர்ச்சீறடித் தளர்நடைச் சிறுவர் மருவறுத செவ்வாம்பல் வாய் மழலையா ரமுதம் பருகியும், ஆனந்தவெள்ளத்து ஆழ்ந்திருந்தான்.

---

## 7. குபேரன் அனுப்பிய தூது

'பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்காற்
குன்றின்மேல் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகும் செவிக்கு.'

பிரமனளித்த வரங்களினாலும் தோள்வலியின் செருக்கினாலும், 'நல்வினை தீவினைகள் உண்டென்பதும், அவற்றால் அடையும் பயன்களாகிய இன்ப துன்பங்கள் உண்டென்பதும் பொய்; ஸ்வர்க்கம் மோக்ஷம் என்ற பெரும்பதவிகளும் பொய்; அவற்றிற்காகப் பாடுபடவேண்டுமென்பதும் பொய்; ஐம்பொறி புலன்கள்பொய்;'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பதும் பொய். பிரம விஷ்ணுக்களை மதியாதீர். தேவர்களையும் அவரது செல்வங்களையும் அழித்து ஒழிப்பதே நமக்கு முதற் காரியம். கொலை களவு காமம் இவைகளைச் செய்ய அஞ்சாதீர்கள்,' என்று சுக்கிராசாரி அசுரருக்குச் செய்த உபதேசப்படி, இராக்ஷதர் தலைவனை இராவணன், தருமாதருமங்களைப் பாராமல், யக்ஷர், தேவர், ரிஷிகள் எல்லோரையும் சின்னபின்னப்பட

வடித்து, விரட்டி, அதட்டி, உருட்டிக் கொடிய மத யானையைப்போல அளகைப் பூஞ்சோலைகளையும் நாசம் செய்து, அடக்குவாரற்று, அட்டகாசம் செய்து திரிந்தான்.

இந்த அக்கிரமங்களையெல்லாம் கேள்வியுற்ற அளகேசன், இராவணனிடத்து ஒரு தூதனை யனுப்பினன். தூதனும் சென்று இலங்காதிபதியைக் கண்டு, "நின் தமையன் கூறிய செய்தி கேளாய்: "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினிது; ஏனையவர் பேசுற்ற இன்சொற் பிறிதென்க,' என்பது நூல்துணிபு. மூத்தோர்சொல் வார்த்தை யமிர்தமாகும். ஆதலால், பெரியார் வார்த்தைகளை வெறுக்காதே. தருமந் தவறாமல் செய்யத் தகுவனவற்றைச் செய்வாய்; பழிப்புக்கிடமான காரியம் செய்யாதே. தேவர், அந்தணர், பெரியார் இவர்களைச் சீறிடுந் தீயோர் யாவராயினும் இப்பிறப்பின்கண்ணே யழிவர்; மறுமையிலும் பாவிகள் புகுகின்ற நரகத்தில் பிரவேசிப்பர். ஆதலின், அறிவுடையார், அவர்களோடு பகை கொள்ளார். தக்கோய், தேவர் முதலானவர் உனக்குப் பயந்து உலகத்தில் வருந்துகின்ற இயல்பையுங் கேட்டேன். அல்லாமலும், வாசனை பொருந்திய எனது பூஞ்சோலையில் வந்து, அதனை அநியாயமாய் அழித்ததையும் கவனித்தேன். எனது சகோதரனுனதால் பொறுத்தேன். இதுபோன்ற தொழில்களை இனி விட்டு விடுவாய்.

'நான் இமயத்தில் ஐந்து திருமுகங்களையுடைய சிவபிரானைத் தியானித்துத் தவம் புரியும் காலத்தில், கண்ணுதற் பெருங்கடவுளோடு வந்த பிராட்டியைப் பார்த்து, 'இவ்வுத்தம இலக்கணமமைந்த தேவி யாரோ?' என நினைக்க, அத்தேவி என்னைப் பார்த்துத் தழலெழ விழித்

தாள். உடனே மங்கையை நோக்கிய என் இடக்கண்ணு னது சாம்பராகிக் கீழேவிழ, உடம்பு வியர்த்து, நடுங்கி, யான் அந்த இடத்தில் இருக்கவும் பயந்து, வேறிடம் புக்கு, முன்போல் மகேசுவரனை வழிபட்டு, அகோர தவம் செய்து, நியமத்திலும், பத்திமையிலும் குறையாமல் இருநூறு வருடங் கழித்தேன். சங்கற்பப்படி தவமும் பூர்த்தியாயிற்று. தவத்திற்கு உகந்து விரிபெருஞ்சடை விமலராஞ் சிவனாரும் பிரத்தியக்ஷமாகி, "தவஞ்செய்தலில் உன்னை யொத்திருப்பவன் நீயேயன்றி வேறு எவனுமிலன்; என்னை யொப்பவன் யானேயன்றி வேறு ஒருவனுமிலன். நான் உன்னை மேலான தோழனாகக் கொள்கிறேன். நீ என்னை ஒத்த தோழனாகக் கொள்வாய். உமா தேவியின் கோபத்தால் ஒளி குன்றிய உனது கண்ணும் பொன்னிறத்தையுடையதாகப் பெறுவாய்," என்று அனுக்கிரகம் செய்தார்.

'தசமுக, இவ்விதப் பெருமையுடைய என்னையும் என் மொழிகளையும் அலக்ஷியம் செய்யாதே. உன்தோள் வலிக்குப் பயந்து அடங்கியிருக்கும் இந்திராதி தேவர்களும் முனிவர்களும் உனக்கு அழிவினைத் தேடுகிறார்கள். ஆகையால், அவர்களுடைய பகையை எண்ணாமல், என் பேச்சைத் தள்ளாமல், உன் நாசத்தைக் கொள்ளாமல், முறையுடனிருப்பாய்,' என்ற இவ்வுண்மைகளை எடுத்துக் கூறும்படி என்னை அனுப்பினான் நின் முன்னோன் தனபதி," என்று தங்கு தடையின்றித் தாட்டியாய்க் கூறினான்.

அன்னவை கேட்டலுமே, அரக்கர் கோன் அனல் எழ விழித்துப் பெருமூச்சுவிட்டுக் கையோடு கை தட்டித் தன் பக்கத்தில் சுற்றிப் பார்த்து, இராக்கத வீரர்களை நோக்கி, "குற்றமிலாத சிவனை ஒப்பானவனும்! அளகாபுரியை ஆளு

பவனும்! எம்பிரான் தோழனும்! என்று இப்படிப்பட்ட வற்றையெல்லாம் கொஞ்சமும் நெஞ்சம் அஞ்சாமல் என் நேரில் நின்று கூறத் துணிந்த தூதன் தலையும் தப்புமா? இவனுக்குத் தக்க பரிசு கொடுக்க இன்னுந் தாமதமேன்?" என்று இரக்கம் சற்றுமின்றிக் கூறலும், ஆங்கிருந்த கொலையஞ்சாப்பாதகனொருவன் அத்தூதுவனை இருதுண்டங்களாகப் பூமியில் விழும்படி வாளால் வீசினான்.

---

## 8. படை எழுச்சி

மிகுந்த கோபத்தையுடைய இராவணன், மந்திரிமார்களைப் பார்த்து, "நான் முதலில் அளகாபுரிக்குப் போய், அக்குபேரனை எதிர்த்து, என் கோபத்தைத் தீர்த்துக் கொண்டு, பிறகே செய்யவேண்டுவதைச் செய்வேன். என் பெரும்படை எழுக!" என்றான். அவ்வளவில் கடல் பொங்கிக் கிளம்பியதென்னப் புறப்பட்டது அரக்கர் சேனை. பொன்னாலாகிய வீரகண்டை யணிந்த பாதங்களையுடையவர்களும், கரியமலைபோலுஞ் சரீரமுடையவர்களும், விளங்கும் வீரப்பட்டமணிந்த நெற்றியையுடையவர்களும், பருத்துக் கொழுத்துத் திரண்ட தோள்களையுடையவர்களும், அகன்ற மார்பிற் பொற்கவசத்தை யுடையவர்களும் ஆகிய எண்ணிலாத இராக்கதர்கள் புறப்பட்டார்கள். தேர்கள் யானைகளை நெருக்கவும், யானைகள் துரகங்களை நெருக்கவும், குதிரைகள் வீரர்களை விரட்டவும், வீரர்கள் தங்களுக்குள் செல்லுதற்கிடனின்றி நெருங்கிச் சென்றார்கள்.

இவ்வாறு புறப்பட்ட தசக்கிரீவன் தானையாற் கிளம்பிய புழுதி, ஏழு உலகங்களிலும் படிந்து, மீண்டு

ஏழுகடல்களிலும் படிந்து, சேருகி, அவைகளைத் தூர்த்து, அஷ்டதிக்கஜங்களின் துதிக்கைத்துவாரங்களையும் அடைத்தது. சேனை பதறி எழுந்து மிதித்துச் செல்லுதலால் பூமி தாங்கமாட்டாமல் கீழே தாழ, அதனைத் தாங்கி நிற்கின்ற ஆதிசேடன் தலையில் பாரம் அழுத்த, அவனது சரீரம் நடுக்குற்றுப் படங்கள் துடித்தன.

வஞ்சனை வல்ல மகோதரன், வலிமை மிகுந்த பிரகத்தன், கொடுமைநிறைந்த சுகன், சாரணன், புகையும் கண்ணுடைய தூமிராக்ஷன், மாயம் வல்ல மாதுலனான மாரீசன் என்ற மந்திரிமார்கள் சூழ இராவணன் குபேரன்மீது மட்டிலாத கோபத்தோடு வீர கண்டை காலிற் கட்டிச் சிறந்த அரதனங்கள்பதித்த மணிமுடிகள் தரித்து, கச்சினை அரையில் இறுக்கிக் கட்டித் தேர்மீது ஏறி, அளகையாம் நகரை நோக்கி விரைந்து சென்றான்.

முன்னமே சென்ற சேனையானது அழகிய சோலைகளையுடைய அளகையைச் சினந்து தாக்கிற்று. அந்நகரத்தைக் காக்கின்ற காவலாளிகள் தங்கள் எஜமானனிடம் ஓடோடியுஞ் சென்று, "நீசனாகிய இராவணன் நம்மீது படையெடுத்து வந்திருக்கிறான்! கடல்போற் பரந்த அவனது சேனை சோலையை யழிக்கின்றது!" என்று பதை பதைத்துக் கூறினார்கள்.

உடனே இயக்கர் தலைவன் தன் பக்கலி லுள்ளவர்களை நோக்கி, "நல்லறிவு சிறிது மில்லாப்புல்லர்களுக்கு நன்மை பயப்பனவற்றைக் கூறுபவர்கள் அவர்களால் கெடுதியடைவார்களென்ற முதுமொழியின் உண்மையினை இன்று கண்டோம்," என்று தன் வாயை மடித்துக் கண்களில் தீப்பொறிபறக்க, "இராவணன் வீரத்தன்மையும் அவன்பெற்ற

வரமும் அழிய இதோ போர் தொடங்குகின்றேன்! நமது சைனியம் முன்னே போர்க்களம் செல்க!" என ஆஞ்ஞாபித்தான்.

"போர்" என்ற வார்த்தையைக் கேட்டதும் கற்பாந்தத்தில் அலைகடல் எழுந்ததுபோலவும், ஊழித்தீப்பரந்தது போலவும் குபேரன் சேனை எழுந்தது. மேகங்கள் இடி இடித்தாற்போல முரசு, பம்பை, உடுக்கு முதலிய தோற் கருவிகளும், கொம்பு, சங்கம் முதலிய துளைக்கருவிகளும் முழங்கின. படை வீரர்கள் அணி அணியாக வீதிகளில் புறப்பட்டார்கள். கொடையில் வல்ல குபேரனும், சேனைகள் புடை சூழ, அழகிய மங்கையர்கள் மங்கல வாழ்த்துக் கூற, யுத்த சன்னத்தனாய், இரதத்தில் ஆரோகணித்துச் செல்ல லுற்றான்.

---

## 9. அளகாபுரிக் கொள்ளை

கடலோடு கடல் எதிர்த்துச் சென்றாற்போல, இராக்கதர் சைனியமும் அளகைப் படையும் பேரொலியொடு எதிர்த்தலும், தேவர்கள் நடுங்கும்படி பெரும்போர் உண்டாயிற்று. தேரோடு தேரும், யானையோடு யானையும், குதிரையோடு குதிரையும் போர் செய்யத் தொடங்கின. வீரர்கள் தம்முள் பொருது, வில் வாள் வேல் சூலம் முதலிய கொடும்படைகளை ஏவினதால் அவர்கள் கால்களும் தலைகளும் அறுபட்டன; சரீரம் இருதுண்டங்களாயின; இரத்த வெள்ளம் ஆறாகப் பெருகிக் கடலிற் புக்குப் பாய்ந்தது.

தூமிராக்ஷன், மகோதரன் முதலிய வீரர்கள் இயக்கர்களை நாநாதிக்கிலும் சிதற வடித்தார்கள். ஸம்யோக

தண்டகன் மாரீசனுடன் கோரயுத்தம் செய்து தோற்ருன். இராவணனும் பகைவர்களை யழித்து ஜயம் கொண்டு நகர வாயிலைக் கிட்டினுன்.

வாயில் காவலனுகிய சூரியபானுவென்பான் தன் பருத்த சரீரத்தோடு, "நில்! நில்!" என்று சொல்லிக் கொண்டே கோபுர வாயிலில் உள்ள தோரண கம்பத்தைப் பிடுங்கி, மலையின்மீது இடி விழுந்தாற்போல அரக்கன்மீது அடித்தான். அக்கம்பத்தைப் பிடுங்கிக்கொண்டே அரக்கர் கோனும் சூரியபானுவை இருந்தவிடம் தேடிப்பார்க்கும் படி ஒழித்துவிட்டான்.

இதனைக் கண்ட மாணுபத்திரன், தன் சேனையோடு போர்க்களம் புக்குத் தூம்ராக்ஷனைத் தாக்க, அவன் மண்டையோடு பிளந்து மூளைசிதறிப் பூமியிற்சாய்ந்தான். பிறகு இராவணனை எதிர்த்து யுத்தம் செய்து அவன் கிரீடங்களை ஒரு பக்கம் சாயும்படி யடித்திடலும் அன்று முதல் இராவணனுக்குப் "பார்சுவ மௌலி" எனும் பெயர் வழங்கலாயிற்று. அவமானங் கொண்ட அரக்கன் முன்னினும் பன்மடங்கு ஆத்திரத்துடன் மாணுபத்திரனைத்தாக்க அவன் படை புலியை எதிர்ந்த ஆடேபோலப் பதறிக்கதறி ஒடுதலும், இயக்கர்கள் தோல்வியுற்று நாட்டை விட்டுச் செல்லலானுர்கள்.

அளகேசன் இலங்கேசனுக்கு முன் நிற்க முடியாமல் அவனை யண்மி, "சகோதர, வீரபராக்கிரம, இராக்ஷசாதிப, உன்வல்லமையை யறிந்தேன். இருந்தாலும், நீ உற்ருர் பெற்ருர் என்ற முறைமையையே மறந்தனை. முன் பிறந்தோரை முனிதல் வேண்டா. 'ஜேஷ்டப்பிராதா பித்ரு சம:' என்பதும், 'மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்' என்பதும்

உன்னிடத்துப் பொய்த்தனவோ?'' என்று தன் வார்த்தைகளை முற்றுங் கூறுமுன்னமே, சுவரிலடித்த பந்துபோல இராவணன் மனத்திற் புகாது எதிர்த்துத் திரும்புதலைக் கண்டதும் இராவணனைக் குபேரன் கையிற்றண்டங்கொடு தாக்கினன். இருவரும் வாலி சுக்கிரீவர்போலவும், சுந்தோபசுந்தர்போலவும், பாவமும் புண்ணியமும் பகைத்தாற்போலவும், மலையும் மலையும் மலைந்ததைமானவும் கொடிய யுத்தம் செய்து, கடைசியில் இராவணனால் தாக்குண்டு, குபேரன் தளர்ந்து விழுந்தான். விழுதலும், நிதி தேவதைகள் குபேரனைத் தூக்கிக்கொண்டு நந்தவனஞ்சென்று களைதீர்த்தன. குபேரன் சைனியமும் அவண் விட்டகல, சோலை சூழ் அளகாபுரியின்கண் தன் கண்ணுற் கண்ட செல்வங்கள், பிரமனாலளிக்கப்பட்ட புட்பகம் முதலியவற்றைக் கொள்ளைகொண்டு, அரக்கர்கோன் ஜயகோஷத்துடன் சென்றான்.

---

## 10. கைலை எடுப்பு

குபேரனை ஜயங்கொண்டு புறப்பட்ட தசக்கிரீவன் தன் விமானத்தோடு கைலையங்கிரியை யடைந்தான்; விமானம் தடைபட்டு அப்புறம் செல்லாமல் நின்றதைக் கண்டான். அவன் தன் மந்திரிகளை நோக்கி, "மந்திரிகாள், விமானம் அப்புறம் செல்லாது தடைபட்டதன் காரணம் யாதென அறிந்து உரைமின்,'' என்றான். அமைச்சர்கள் காரணங் கூறத் தெரியாமல் சற்று நிதானித்துப் பிறகு, "பிரபுவே, இப்புட்பகம் பிரமனால் அளிக்கப்பட்ட நாள் முதல் இதுகாறும் குபேரனை விட்டுப் பிரிந்ததில்லை. ஆதலின், இப்போது நேர்ந்த பிரிவினால் மனச்சஞ்சலமடைந்து, மேல்

செய்யும் காரியம் இன்னதென அறியாது திகைத்து நின் றதுபோலும்,'' எனச் சாதுரியமாய் விடைபகர்ந்தார்கள்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்குங்கால், சிலாத முனிவரின் புதல்வரும், சிவபெருமான் முதல் மாணுக்கரும், கோடிக்கணக்கான வருஷங்கள் உக்கிர தவம் செய்து சிவபெருமானுக்கு வாகனமும் துவார பாலகரு மாக இருக்க வரம்பெற்றவருமான நந்தி தேவர், ஆங்கண் எழுந்தருளி, இராக்ஷஸ மன்னனைப் பார்த்து, "துன்றுதிற லோய், திருமகளோடு திருமால் பாற்கடலிற் பள்ளிகொண்டு அருளுதலையொப்ப, பார்வதியோடு பரமசிவன் நித்திய மாய் உறைகின்ற இடம் இக்கைலாயமாகும். அதனுலேயே தேவவிமானமாகிய புட்பகம் இதன்மேல் செல்லாமல் நின் றது. பூமிக்கு அழிவு விளைத்த கொடிய அரக்கர்களாகிய வித்துன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற மூவரின் கோட்டைகளையும் நெருப்பிலிட்டு நீறுக்கிய திரிபுராந்தகன் வீற்றிருக்கின்ற கைலைக்கு மேலாக உன் விமானம் செல்வது தகாது. அடாத காரியத்தைச் செய்யாதே. அடாது செய்பவர் படாது படுவர். இஃது உண்மை. இவ்விமா னத்தை அப்பாற் கொண்டு செல்,'' என்று பலவாறு கண்டித்துரைத்தார்.

இராவணன் அது பொறுனய், நந்தீசரை மனம் புண் ணும்படி வார்த்தைகள் பல கூறி, அவர் முகத்தையும் குரங் கின் முகமென இகழ்ந்தான். அதனுற் கோபங் கொண்ட கணநாதர், 'கொடியோய், நாம் இவ்வாறு தகாத காரியஞ் செய்தோமே யென வருந்தவேண்டுவதுபோக, என் முகத் தைக் குரங்கு முகமென்று சொல்லினை ? அக்குரங்குகளே

யுன் இராச்சியத்திற் புகுந்து உன் குலத்தை யழிக்கப் பெறுவாய்,'' என்று சபித்தார்.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' என்றது பொய்யல்லவே. அதன்படி பின்னும் சற்றும் அச்சமின்றி, "எனக்குத் தடையாக விருக்கின்ற இம்மலையை இதன் கண்ணுள்ள யாவரும் நடுங்கத் தூளாக்குகின்றேன் பார்,'' என்று வீரம் பேசித் தன் இருபது கைகளாலும் கைலையைப் பெயர்க்கலுற்றான்.

உடனே, ஸப்தரிஷிகள் உள்ளிட்ட அழகிய முனி சிரேட்டர்களும், தேவர்களும், ஞானிகளும், பக்தர்களும், கணநாதர்களும், சித்தர்களும் அச்சங் கொண்டு சிதறி ஓடினார்கள். இப்படி வேத வித்தகர்களான தவசிகளின் மனக் குழப்பத்தையும், இளங்கொடிபோன்ற உமாதேவியின் சஞ்சலத்தையுங் கண்ட பிறை சூடியார், தம் காற்பெருவிரலால் மலைபோன்ற அரக்கனது சரீரம் துடிதுடிக்கும்படி அழுத்தினார். அழுத்தவே, அரக்கர் தலைவனுமிராவணன் பயந்து கதறினான். அவன் சரீரம் ஆலையிலகப்பட்ட கரும்புபோல அரைபட்டுப் பத்து வாயினின்றும் இரத்தமானது பெருக்கெடுத்து ஓட, ஓர் ஆயிரம் வருடம் மலையின்கீழ் அடங்கி யொடுங்கி முடங்கி மனஞ் சுழன்று அலறிக்கொண்டு கிடந்தான்.

இவ்வாறு வெள்ளி வெற்பின்கீழ் அகப்பட்டு வருந்துகின்ற இராவணனை மந்திரிமார் உற்றுநோக்கி, 'தசக்கிரீவ, கொன்றைவேய்ந்த செல்வராகிய சிவபெருமானது திருச்செவிகளிற் படுமாறு, உனது கையே வீணையாக, உம்பர் போற்றும் சாம வேதத்தைக் கானஞ் செய்வாய்,'' என்று வணங்கிக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி இராவண

னும் தன் தலைகளுள் ஒன்றைக் கொய்து கையின் கண்ணே சேர்த்து, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்ற ஸப்த சுரங்களாலும்,

"நதியா டியசெஞ் சடையாய், நகைவெண்
மதியாய், மதியா தவர்தம் மதியிற்
பதியாய், பதினெண் கணமும் பரவும்
துதியாய், சரணம்; சுடரே, சரணம்.

"வேதியாய், வேத விளைபொருளாய், வேதத்தின்
நீதியாய் நீதி நெறிகடந்த நீளொளியாய்
ஆதியாய் ஈறாய் நடுவாய் அவைகழிந்த
சோதியாய் நின்றாய், என் சோதனைத்தோ நின்னியல்பே.

"நின்னால் மொழிந்தமறை நின்னடிகள் வந்தித்தும்
பன்னா ளருச்சித்தும் பாதந்த லைசுமந்தும்
உன்னாமம் வாசித்தும் உன்னையறி யேனென்று
சொன்னா லடியனேன் சோதனைத்தோ நின்னியல்பே.

"பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினும் சிறியதுமாய்
அரியதினும் அரியதுமாய் எளியதினு மெளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானுங் காட்சியுமாய் அவைகடந்த
துரியமுமாய் நின்றாய்என் சோதனைத்தோ நின்னியல்பே."

என்று இப்படித் துதித்து வணங்க, பக்த பராதீனரும் சாம கானப் பிரியருமான எம்பெருமான் அரக்கனுக்கு அருள் செய்ய மனமுவந்து, "நம் கைலையின்கீழ்க் கிடந்து நமக்கு உன்பால் அருளுண்டாம்படி நீ அலறியதால்உனக்கு 'இராவணன்' எனப் பெயர் தந்தோம். நீ கேட்டுக் கொண்ட வண்ணம் மூன்று உலகையும் ஆட்சி புரிய மூன்றரைக் கோடி யாயுளையும், எவ்விதமான ஆயுதத்தையும்

ஜயித்துவிடும்படியான ஸர்வ சக்தி வாய்ந்த சந்திரகாசம் என்னும் வாளையும் தந்தோம், நீ போய் வருவாய்,'' எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

85574

அவைகளைப் பெற்றுக்கொண்டு அரக்கர் கோனும் அரனடி வணங்கித் தனது விமான மேறி விரைந்து சென்றான்.

செல்லும் வழியில் தசக்கிரீவனைத் திருமால் கண்டு விஷய முணர்ந்து, “நீ பெற்ற மூன்றரைக்கோடி ஆயுளுந் தவிரப் பெரியதாகிய அரைக்கோடியும் கேட்பாய்,'' என்றார். வஞ்சனை யறியாத இலங்கேசன், மாதொரு பாகரை யடைந்து, “முதல்வனே, முன்பு தந்த மூன்றரைக் கோடியும் கழிய அரைக்கோடி ஆயுளுந் தருவாய்,'' என வேண்ட, உமாபதியார், சர்ப்பசயனராகிய மாயரது மாமாயம் இஃது என ஓர்ந்து, “அங்ஙனமே அளித்தோம்,'' என்று அருளிச் செய்யத் தசகண்டன் விமானமேறிக் களிப்புடன்சென்றான்.

---

O-,1FKA,R:9
N29

## 11. திக்கு விஜயம்

இவ்வாறு கங்கைசேர் சடைக் கண்ணுதலருள் பெற்றுப் புறப்பட்ட இராவணன் ஒரு வனத்தை யடைந்தான். ஆங்குக் குசத்துவசன் புதல்வியாகிய வேதவதி யென்பாள், திருமாலையடைய விரும்பிச் சடை முடி தரித்து, மான் தோல் உடுத்துத் தவஞ் செய்துகொண் டிருந்தாள். அவளழகைக் கண்டு அரக்கர் கோன் அவளைத் தனக்கு மனைவியாமாறு வேண்ட, அச்சொல் அவள் காதில் நாராசம் புகுந்ததுபோலப் புகுதலும் அவள் சினந்து,

"பையா டரவிற் றுயிலும் பரனைக்
கையா ழியனைக் கருணு கரனை
மையார் மழைவண் ணனைமா மலர்மேல்
செய்யா ளுறையும் திருமார் பினனை,

சேயோ னைஅடைந் தவர்சிந் தையனை
தூயோ னைஎன் ஆ வியைஎன் துணையை
மாயோ னைவரித் தனன்யான்."

என்று கூறி, மேலும், "பேய்க்கோட்பட்டவன்போல் பிதற்றுகிருய். புலத்திய வமிசத்திற் பிறந்த உனக்கு இது தகுமோ? இது முறையோ? இது தருமந்தாஞே?" என்று கூறி, அப்பால் சென்ருள்.

அரக்கன் பின்னும் தகாத வார்த்தைகள் சில கூற, அவற்றைப் பொருத வேதவதி, "உனக்கும் இலங்கைக்கும் உன் கிளைக்கும் கேடாகத் தோன்றுவேன் யான்," என்று சாபங் கொடுத்துத் தீப்பாய்ந்தாள். வாஞேர் மலர் மாரி பொழிந்தனர். காட்டிலுள்ள அருந்தவத்தோர்கள் வியந்தார்கள்.

இராவணன், அவ்விடத்திலிருந்து புறப்பட்டு, இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் ஒருங்கு கூடியிருக்கும்படியான மருத்தன் யாகசாலையை யடைந்தான். அவனைக் கண்டவுடன் வாசவன் அஞ்சி மயிலாக மாறினன்; வருணன் அன்னமாய் ஆகாயத்தில் பறந்தான்; யமன் காக்கையாகிக் கதறினன்; குபேரன் கோம்பி வடிவானன். இவ்வாறு எல்லோரும் மாயா உருவங்கொண்டு மாயமாய்ப் பறக்க, மருத்தன் வேறு கதியின்றி, இராவணனை நோக்கி, "தோற்றேன் உனக்கு," என்று ஒப்புக்கொண்ட பின்பு,

"எனது வெற்றி," என்றிரைந்துகொண்டு இராவணன் அப்பால் சென்றான்.

வழியில் எதிர்ப்பட்டவர்களை எமனுலகம் அனுப்பி விட்டு அயோத்தியை அடைந்தான் அரக்கன். அந்நகர் அரசனான அனரண்யனை இராவணன் மிகவும் அவமதித்த தனால் அவன் கோபமடைந்து, "காலத்தை ஒருவராலும் கடக்க முடியாது. நீ என்னை அவமதித்தாயாதலால், உன் தலைகள் பத்தும் பனங்காய்கள் போல என் குலத்தில் தோன்றும் தசரத ராமன் கையால் வீழ்க," எனச் சபித் தான்.

சாபத்தை ஏற்றுக்கொண்டு பின்பும் அனரண்யனை அரக்கன் வருத்திக் கொடிய போர் விளைக்க ஆங்குத் தோன்றிய நாரத மகா முனிவர் இராவணனை நோக்கி, "சிங்கம் நரியோடு சண்டை தொடங்கலாமா? யானைக்குப் பூனை ஈடாகுமா? இம்மானுடரை எதிர்த்தல் உன்போன்ற வீரர்களுக்கு அழகாகுமா? நீ இப்பொழுதே சென்று எம னுடன் யுத்தம் தொடங்கினும், அவன் தோல்வியடைதல் திண்ணமே," என்று தோத்திரமாகக் கூறினார்.

அவ்வளவில் அனரண்யனை விடுத்தான்; விமானமேற் கொண்டான்; சென்றான் நமனுலகம் இராவணன். ஆங்கு நரகத்திற் கிடந்துழலும் உயிர்களைக் கண்டான்; மனம் விண்டான்; எல்லோரையும், 'கூட்டோடு கைலாயம் புறப் படுங்கள்,' என்றான். இதனை யறிந்த யமபடர்கள் பொங்கி நாநாதிக்கிலும் எழுந்தார்கள்; இராவணனை வந்து சூழ்ந்து எதிர்த்தார்கள். இராவணன் அவர்களை அடியோடு ஒழித்துவிட்டான்.

அந்த யமபடர் நாசமடைந்ததன் பின்பு யமன் புறப் பட்டு இராவணனை யெதிர்க்க இருவரும் ஒருவரையொருவர் வெல்லக் கூடாமல் ஏழு நாள் அகோராத்திரம் யுத்தம் செய் தனர். ஒன்றும் சாத்தியமில்லாதது கண்டு காலன் தன் காலதண்டம் கைக்கொள்ளலும், 'இனி மோசம் போய்விடும்' எனவெண்ணிக் கஞ்சமலர்க் கடவுள் தோன்றித் தடுத் தனன். பிறகு மாரீசன் மகோதரன் முதலியவர்களுடன் பிரயாணப்பட்டுத் தசகண்டன் கீழுலகஞ் சேர்ந்து, போக வதியை யடைந்தான்.

அங்கு வாசுகியோடளவளாவி, நிவாத கவசர்களோடு அமர் புரிந்து, வருணனை வென்று, இராவணன் அண்டம் அதிரவார்த்து, வந்த வழியே புறப்பட்டு, மதில் இலங்கை நோக்கி வழிக்கொண்டான். வழியில் சுக்கிரன் எதிர்ப் பட்டு இந்திரஜித்தன் வல்லமைகளையும் பெருமைகளையும் எடுத்துக்கூறக்கேட்டு, இராவணன் அகமகிழ்ந்து, மைந்த னையும் உடனழைத்துக்கொண்டு, தன் நகரடைந்தான்.

அடைந்ததும், தான் இல்லாத சமயத்தில் தன் சிற் றன்னையாகிய கும்பிநசியை மதுவென்னும் அரக்கன் கவர்ந்து சென்றதைக் கேட்டுக் கோபங் கொண்டு தன் சேனையுடன் இராவணன் மதுவை எதிர்த்துச் சென்றான். மதுவும் பயமின்றி யுத்தம் செய்யக் கும்பிநசி வருத்த முற்று இராவணனை யடைந்து, "என் கழுத்தில் தாலி நீ தந்தருளல் வேண்டும். இம்முறை அரக்கர்களுக்கு ஏற் பட்டதே," என வணங்கினாள். உடனே இராவணன் மது வுடன் நட்புக்கொண்டு அவன் இல்லில் விருந்துண்டு ஒரு நாள் தங்கி யிருந்தான்.

மறுதினம் புறப்பட்டு அளகைக்குப் பக்கத்தில் குரவம், செருந்தி, சுரபுன்னை, கோலம், தமாலம், குளிர் சாந்தம், மரவம், குருந்தம் முதலிய மரங்களும், தாமரையல்லி அன்னம் முதலியன நிறைந்த அழகிய தடாகங்களும், ஆடுமயில்கள், கூவுங் குயில்கள், பாடும் வண்டுகள் முதலியனவும் நிறைந்த சோலையை யடைந்து, இராவணன் நளகூபரர்பாற் செல்லும் அரம்பையைக் கண்ணுற்றான். உடனே அரக்கர் கோன் அவளை யண்மித் தகாத வார்த்தை சில புகன்று, துன்பம் செய்ய, அவள், 'நீ மாநில மாதர் தம்மை அவர்கள் சம்மதமின்றித் தீண்டுவாயாகில், அவர் கற்புத்தீயினாற் சுட்டெரிக்கப்படுவாய்,' எனச் சாபமிட்டாள்.

பிறகு அவன் தேவலோகஞ் சென்றான்; இந்திரன் முதலியோர் நடுங்கினர். இராவணன் இந்திரனைப் போரில் வென்று சிறைப்படுத்தினான். பிரமன் தோன்றி இந்திரஜித்தையும் இராவணனையும் புகழ்ந்து, இந்திரனைச் சிறை விடுமாறு வேண்டினன். இராவணனால் சிறை விடப்பட்ட பிறகு இந்திரன் தன் பொன்னகரடைந்தான்.

---

## 12. நட்புப் பேறு

இந்தப்பிரகாரம் உலகத்துள்ளவர்களை யெல்லாம் தன்னடிப்படுத்திய பிறகு, மாகிஷ்மதி யெனும் பட்டணம் அடைந்தான் அடல் அரக்கன். ஆங்கு அந்நகர வேந்தனாகிய கார்த்தவீரியார்ச்சுனன் இல்லாதது அறிந்து, இராவணன் அவன் மந்திரிகளை நோக்கித் தான் வந்த காரியத்தைக் கூறுதலும், அவர்கள் அவனைச் சற்று நேரம் காத்திருக்கவேண்டினார்கள். அதற்குள் அரக்கர் கோன் சிவ பூஜை

செய்யக் கருதி நருமதை யாற்றங்கரைக்குச் சென்று, ஆங்கோர் இடத்தில் விதிப்படி பூசனை நடத்தினன்.

அவ்வாற்றின் மற்றொரு பக்கத்தில் கார்த்தவீரியன் தன் தேவியருடன் ஜலக்கிரீடை செய்து, தன் ஆயிரம் கைகளாலும் கட்டியிருந்த நீரை விட்டனன். அந்நீர் இரு கரையும் புரண்டு அரக்கன் செய்யும் பூசையைக் கெடுத்துச் சிவபூசைத் திரவியங்களையும் அடித்துச் சென்றது. அதனால் கோபங் கொண்ட இராவணன் சுகசாரணர்களை ஏவினன். அவர்களும் ஆஞ்ஞைப் பிரகாரஞ் சென்று நடந்த விஷயம் இன்னதென வந்து உரைத்தனர்.

தசமுகன் சற்றுந் தடையின்றி அருச்சுனன் மீது பாய்ந்தான். கொடிய யுத்தந் தொடங்கிற்று. 'இராக்ஷதனுக்கும் ஒரு புரோக்ஷதன் உண்டு' என்ற பழமொழிப்படி கார்த்தவீரியன் அரக்கனை வலியழித்து மற்றோரையும் அடித்துத்துரத்தி எல்லோரையும் முடிவில் தன் நகருக்கு அழைத்துச் சென்று சிறை வைத்தான்.

இவ்விஷய மறிந்த புலத்தியன், அருச்சுனன் வாழும் வள நகரடைந்து, அவனை நோக்கி, "இறைவ, இராவணன் மேல் சிறிய சிற்றந் தவிர்ந்து நீ யவனைச் சிறை விடுக,' எனச் செப்புதலும், அருச்சுனன் கோபம் தணிந்து, சிறை விடுக்க, இராவணன் இலங்கை யடைந்தான்.

சில நாட்கள் சென்றன. இராவணன் கார்த்தவீரியனிடம் பட்ட பாட்டைச் சிறிது மறந்தான். ஒருநாள் இராவணன் தன் சேனையுடன் புறப்பட்டுக் கிட்கிந்தையை யடைந்தான். அங்கு அப்பொழுது வாலியைக் காணமல் தாரையைக்கண்டு அகம்பாவத்தோடு, "வாலி இங்குளனே?

இல்லையாயின், அவனை எங்குக் காணலாம்? அவனுடன் வாளமர் செய்யக் கருதிப் போந்தனன் யான்,'' என்றான்.

அதற்குத் தாரை நகைத்து, "நீயா வாலியுடன் வர்ட் போர் செய்யப் போகிறாய்! உனக்கு இறுதிக் காலம் சமீபித்தது போலும்! காலனோடு கனல்வது பிழைக்கவா? எதிரியின் பலமறியாமல் சண்டைக்கு வரலாமா? துந்துபி முதலியோரின் எலும்புக் குவைகளை இதோ பார். நீ பிழைத்தல் அரிது. வேண்டுமானால் தென்கடலில் சிவ பூஜை செய்துகொண்டிருக்கக் காணலாம்,'' என்றாள். உடனே இராவணன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தென் கடற்கரை அடைந்து, வாலி பூஜை புரியுமிடத்தையுந் தெரிந்து கொண்டான். அவன் அறியாதபடி அவனைப் பிடித்துவிட எண்ணி, இராவணன், வாலியின் பின்புறமாக மெல்லச் சந்தடி செய்யாமற் சென்றான்.

அதனை யறிந்த வாலி இராவணனைத் தன் வாலினால் இறுக்கிக் கட்டி, மையணி கண்டர் பூசை முடித்து, இராவணன் வாலில் தொங்கிக்கொண்டிருக்க, பாம்பைக் கௌவிச் செல்லும் கருடனைப்போல மேற்கடலை நோக்கிப் பாய்ந்தான். இவ்வாறே மற்றைக் கடல்களிலும் ஸ்நானம் செய்து சிவ பூஜை முடித்துத் தன் நகரடைந்தான்.

சற்று நேரஞ் சென்றபிறகு வாலில் இருக்கும் இராவணன் ஞாபகம்வர, வாலி அவனை அவிழ்த்துவிட்டு, "நீ வந்த காரியம் என்?" என, இராவணன், "உன்னோடு யுத்தம் செய்ய வந்து அகப்பட்டேன். யான் பட்டபாடு போதும். இன்று முதல் என்னை நின் தோழனாகக் கொள்ளவேண்டும்,'' என்றான். உடனே வாலி உவகை யுற்று, அவனைக் கட்டித் தழுவி, அவனுக்கு நல்ல விருந்தளித்து, ஒரு மாத

காலம் தன் அரண்மனையில் வைத்திருந்து, உபசரித்துப் பின் இலங்கை செல்ல விடையளித்தனன். இராவணனும் மிக மகிழ்ந்து, தன் பட்டணஞ் சேர்ந்து இனிதிருந்தான்.

---

## 13. சீதாபஹரணம்

'அம்பல் அயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.'

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை," என்னும் ஆன்றோர் வாக்கிற் கிணங்கப் பிதுர் வாக்கிய பரிபாலனம் செய்யும்பொருட்டுத் தசரத குமாரரான இராமர், தம் மனைவி சீதையுடனும் தம்பி இலக்குமணனுடனும் புறப்பட்டுத் தண்டகாரணிய மடைந்தார். ஆங்கு, விராதன் என்ற ஓர் அரக்கன் ஸீதையை எடுத்துக்கொண்டு ஓட, அவனிருகரங்களையும் வெட்டித் தள்ளி, அவனைக் கொன்று, அவன் வேண்டுகோளின்படி அவனுக்குச் செய்யவேண்டிய ஈமக் கடன்களையும் செய்து முடித்தார். பின்பு சரபங்கர், சுதீக்ஷ்ணர், அகஸ்தியர் முதலிய மகா முனிவர்களைத் தரிசித்து, ஆசிகூறப்பெற்று, இராமலக்ஷ்மணர் சீதாதேவியுடன் பஞ்சவடி யடைந்தார்கள்.

ஆங்குச் சீதையும் இராமரும் இயற்கை விநோதங்களை யனுபவித்துக்கொண்டு, இலக்குமணனு லமைக்கப்பட்ட பர்ணசாலையில் வசித்து வந்தார்கள். ஒரு நாள் சூர்ப்பநகை இராமரது திருமேனி அழகைக் கண்டு, அவரைக் கலியாணம் செய்துகொள்ளும்படி வேண்ட, அவர் இளைய

பெருமாளிடம் அவளை ஏவினர். அவள், இலக்குமணரால் அவமானமடைந்து, மறுபடியும் இராமரிடம் சென்று, கோபங்கொண்டு சீதையை ஒழித்துவிடக் கருதி, அவள் மேல் பாய்ந்தாள். உடனே இலக்குமணன் அவள் மூக்கை அறுத்து அங்க பங்கம் செய்தான். இரத்தம் ஆருகப் பெருக ஆரவாரித்துக்கொண்டு, தன் உறவினராகிய கரதூஷணுதியரிடம் ஓடிச் சூர்ப்பநகை இலக்குமணன் தன்னை அவமானப்படுத்திய வரலாற்றைக் கூற, கரன், தூஷணன், திரிசிரன் முதலியோர் தங்கள் பதினன்காயிரம் இராக்கதப்படையோடு இராமரை எதிர்த்தார்கள்.

அத்துணைப் பெயரையும் ஒரு நொடியில் இருந்தவிடம் தெரியாமல் அடித்தொழித்துத் தாசரதி ஜயகோஷத்துடன் நின்றுர்.

அப்பால் அறுபட்ட மூக்கோடும் அலறிக்கொண்டு சூர்ப்பநகை இலங்கையை யடைந்து, தன் தமையனுன இராவணனைக் கண்டு, அவனுக்குக் கோபமூண்டெழுமாறு தான் அங்க பங்கப்பட்டதையும், கரதூஷணுதியர் இறந்ததையும் கூறிவிட்டுச் சீதையின் ரூபலாவண்யத்தையும் விசேஷமாய் எடுத்துக் கூறினள்.

அதைக்கேட்ட இராவணன் இராமலக்குமணரிடத்துக் கோபமும் சீதையிடத்துஆசையும் கொண்டவனுய் உடனே புறப்பட்டுக் கோகரணுச்சிரமம் குறுகினன்; மாரீசனைக் கண்டான்; தனது எண்ணத்தை வெளியிட்டுத் தனக்கு வேண்டிய உதவி புரியுமாறு அவனைக் கேட்டான்.

மாரீசன், சூடு கண்ட பூனை யாதலால் நடுநடுங்கி, "இராவணு, வேறு ஏதாயினும் இருந்தால் பேசு. நான் பட்டபாடு எனக்குத்தெரியும். உனக்கும் இந்த எண்ணம்

வேண்டா,'' என்று பலவாறு இதங் கூறினன். அதனைச் செவிக் கொள்ளாமல் இராவணன் அவனைத் துன்புறுத்தும் பொழுது, அரக்கன் கையால் அழிவதைவிட இராமபாணத்தால் இறப்பது முத்திதருமெனக்கொண்டு, மாரீசன் இராவணனிஷ்டப்படி பொன்மான் உருக்கொண்டு, பஞ்சவடி ஆச்சிரமம் சென்று, துள்ளி விளையாடினன்.

இவ்வாறு துள்ளி விளையாடுகிற புள்ளி மானைக் கண்டு சீதை தன் கணவரிடம், "நாதரே, இந்த மானைப் பார்த்தீர்களா? எவ்வளவு அழகாயிருக்கிறது! இதனைப்பிடித்துத் தாருங்கள். இதனோடு விளையாட விரும்புகிறேன்,'' என்றாள். இராமர் அதனைப் பின்பற்றிச்சென்றார். அம்மாயமான் இராமரைக் காட்டிலும் மேட்டிலும் வெகு தூரம்இழுத்துச் சென்றது. அதனால் வெறுப்படைந்த இராகவர் பாணத்தைப் பிரயோகித்தார். இராம பாணம் தப்புமா? மான் விழுந்து மடிந்தது. ஆனால், மான் விழும்போதே, "ஹா ஸீதா! ஹா லக்ஷ்மணா!! என்று அலறிக்கொண்டே விழுந்தது. இச்சத்தம் காதில் விழவும் பிராட்டி மனந்துடித்தாள். நாதருக்கு ஏதோ ஆபத்து வந்ததென நிச்சயித்து லக்ஷ்மணனை நோக்கிச் சில கடூரமான வார்த்தைகளைக்கூறி உதவிக்குப்போகுமாறு ஏவினள். அவை பொறாத இராமானுஜன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தன் தமையனரைத் தேடிச்சென்றான்.

அப்போது ஸீதை பர்ணசாலையுள் தனித்திருக்கநேர்ந்தது. 'இதுவே தக்கசமயம்; இச்சமயந்தவறின், எச்சமயமும் வாய்ப்பதரிது,' என்று எண்ணி, இராவணன் சந்நியாசி வேடந் தரித்துத் தண்ட கமண்டல தாரியாய்ப் பர்ணசாலைக்கு வந்து, "பவதி பிக்ஷாந் தேகி,'' என்றான்.

"காஷாய தண்டமாத்ரேண யதிः பூஜ்யோ நசம்சயः" என்றபடி தேவி, துறவியைக்கண்டதும் ஆசனமளித்துக்கிரமப்படி உபசரித்தாள். இராவண சந்நியாசி தன் வேஷத்திற்குத் தகாத சில புன்மொழி கூறலும், சீதை தன் செவிகளைக் கையால் பொத்திக்கொண்டு, "அடாமூடா, பொய்த்துறவியே, என்ன பிதற்றுகிருய்? என் கண்காணுமல் அப்பாற் செல்," என்று கதறிப்பதறினுள். உடனே இராவணன் பர்ணசாலையுடன் பூமியைப் பெயர்த்துச் சீதையைத் தன் விமானத்தில் வைத்துக்கொண்டு, ஆகாய மார்க்கமாய்ச் சென்ருன்.

சீதை யலறுகிற சப்தம் காதில் விழவே, தசரதருக்கு நண்பனும், கழுகரசனுமான ஜடாயு, இராவணனுடைய ரதத்தைத்தடுத்து அவனுக்குப்பல நன்மொழி கூறியும் கேளாததனுல் தன் இறக்கைகளால் மோதியடித்து இராவணனேடு போர் புரிந்தான். ஆனுல், தீயவனுன அரக்கன், தன் வாளினுல் சிறகுகளை வெட்டி வீழ்த்திக் கழுகு அரசைக் குற்றுயிராக்கிச் சென்ருன்.

இரதம் வேகமாய்ச் சென்று இலங்காபுரி அடைந்தது. இராவணன் ஜானகியை அசோக வனத்தில் சிறை வைத்து, அவளைத் தன் வசப்படுத்தும்படி, வெருவரு தோற்றமும் விகட வேடமுமுடைய பல அரக்கிகளை அவளுக்குக் காவல் வைத்துவிட்டுத் தன் அரண்மனையடைந்து, சந்தோஷமாக அட்டகாசம் செய்துகொண்டிருந்தான். இது நிற்க,

மானைப் பின் பற்றிச் சென்ற இராமபிரானுர், தம்மைத் தேடி வந்த தம்பியுடன் பதைபதைத்து ஒடிப் பர்ணசாலையைப்பார்க்க, ஆங்குப் பிராட்டியைக் காணுமல் மனங்

கலங்கி, அழுது புலம்பி, அங்கம் வாடி, அங்குமிங்கும் ஓடிக் கண்ணீர் ஆருகப் பெருக,

"வாவு மிளமான்காள்! மயில்காள்! மடப்பிடிகாள்!
கூவுங் கரிய குயில்காள்!மென் புள்ளினங்காள்!
ஆவியென மேவி யகலேன் எனவகன்ற
ஓவறுநற் காதலிதான் உற்றவழி காட்டீரோ?"

என்று புலம்பிக்கொண்டு சென்ருர்.

அவர்கள் வழியில் ஓரிடத்தில் சிறகிழந்து குற்றுயி ராய்க்கிடந்த ஜடாயுவைக்கண்டார்கள். ஜடாயு, "சீதையை இராவணன் எடுத்துச் சென்ருன்," என்ற சமாசாரம் உரைத்து, அக்கணமே உயிர் துறந்தான். இராமர் ஜடாயு வுக்கு விதிப்படி செய்யவேண்டிய அபரக்கிரியைகளைச் செய்து முடித்து, மேலான பதவியு மளித்தார்.

அப்பால், சகோதரர் இருவரும் சீதையை நாடித் தென்றிசை நோக்கி நடந்தனர். வழியில் கபந்தன் என்னும் இராக்ஷதன் தன் வழக்கப்படி கைகளை நீட்டி, இரு வரையும் விழுங்க எத்தனித்தான். வீரர் இருவரும் அவன் கைகளை வெட்டி வீழ்த்த, அரக்கன் சாப விமோசனம் பெற்றுச் சுயரூபமடைந்து, விமானமேறித் தேவர் உலக மடைந்தான். பின்பு தாசரதிகள் சபரி ஆச்சிரம மடைந்து, அவள் அன்புடன் அளித்த கனிகளை யுண்டு, அவளுக்கு வீடருளி, ரிசியமுகப் பர்வதச் சாரலில் திரிந்துகொண்டிருந் தார்கள்.

இங்ஙனம் திரிகையில்,ஒருநாள் அழகுமிக்கு விளங்கும் பம்பா நதிக்கரையில் இராமலக்குமணர்கள் இருப்பதைப் பார்த்து, ரிசியமுகப்பர்வதத்தின் உச்சியில் இருந்த சுக்கிரீ

வன், "இவர்கள் யாரோ ? சுந்தர புருஷர்களா யிருக்கிறார்களே! வீரர்களாயும் விளங்குகிறார்களே! வாலியால் அனுப்பப்பட்டவர்களா யிருப்பார்களோ? இங்கும் வந்து விட்டார்களா? இனி யாது செய்வோம்?" என்று நினைத்து நடுங்கினான். உடனே அவன் பிரதான மந்திரியும், புத்திசாலியும், வியாகரண பண்டிதனுமான ஹனுமான் அவனைத் தேற்றி, "நான் போய் விசாரித்து வருகிறேன்," எனப் புறப்பட்டான். புறப்பட்டுப் பம்பைக் கரை யடைந்து, வெகு விநயத்துடன் அவர்களை யண்மி, தன் பேச்சினால் அவர்களை மகிழச் செய்து, தன் வரலாறு, தன் அரசன் வரலாறு முதலியவற்றை ஆதியோடந்தமாகக் கூறி, இராம லக்ஷ்மணர்களுடைய சரித்திரத்தையும் அவர்கள் வாயிலாகவே கூறக் கேட்டுச் சந்தோஷ மடைந்து, இராகவரையும் இலக்ஷ்மணனையும் தன் தோளில் தூக்கிக்கொண்டு, சுக்கிரீவனிடம் சென்றான்.

அவர்களைக் கண்டதும் சுக்கிரீவன் மனமகிழ்ந்து, அவர்களைத் தக்க ஆசனத்தமரச் செய்து வணங்கினான். பிறகு இராமரும் சுக்கிரீவனும் அக்நி சாக்ஷியாகச் சிநேகம் செய்துகொண்டு, இராமர் வாலியை வதைத்துச் சுக்கிரீவனுக்குப் பட்ட மளிப்பதாகவும், சுக்கிரீவன் சீதையைத் தேடிக்கொடுப்பதாகவும் ஒருவருக்கொருவர் வாக்குறுதி செய்துகொண்டனர்.

பிறகு சுக்கிரீவனுக்கு நம்பிக்கை உண்டுபண்ணும் பொருட்டுப் பக்கத்திருந்த ஸால விருக்ஷங்கள் ஏழையும் தம் கைக்கூரிய பாணத்தால் துளைத்தும், துந்துபியின் உடல் எலும்பைத் தமது காற் பெருவிரலினால் ஆகாயத்தில் எற்றியும் இராகவர் தம் வல்லமையைக் காட்டினார்.

தகுந்த வீரர் தனக்குத் துணை கிடைத்ததைக் கண்டு அள விலா ஆனந்தங்கொண்ட சுக்கிரீவன் ஓடிச்சென்று, வாலி யைப் போருக்கழைத்துக் கொடிய யுத்தஞ் செய்தான்.

சுக்கிரீவன் வலி குறைந்து வரவரக் களைத்துச் சளைப் பதைப் பார்த்து, "இனித் தாமதிக்கக் கூடாது. ஆபத்தில் உதவுகிறவன் அல்லவா அருமைச் சிநேகிதன்? 'உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு," என்ற சிநேக தருமத்தை நிலை நாட்டக் கருதி, இராமர் ஒரு பாணத்தைப் பிரயோகம் செய்தார். பாண மானது நடு மார்பிற் பாய, வாலி அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்தான்; பாணத்தில், 'ராம' என்று எழுதியிருக் கக் கண்டான்; அற்புதங் கொண்டான். உடனே வாலி, இராமருடன் பல வார்த்தையாடிக் கடைசியில் ஞானம் பெற்று, இராகவரைத் தோத்திரஞ் செய்து, சுக்கிரீவன் அங்கதன் முதலியோரை இரக்ஷிக்கும்படி வணங்கிக் கேட் டுக்கொண்டு, இராமரைத் தியானித்தவண்ணமே மேல் உலகு அடைந்தான்.

சில நாட்கள் சென்று, பிரானுரின் கட்டளைப்படி அங்கதனுக்கு இளவரசுப்பட்டங் கட்டி, சுக்கிரீவனுக்குக் கிட்கிந்தா ராஜ்ய பட்டாபிஷேகமும் செய்யப்பட்டது. வானரர்கள் மிகுந்த ஆனந்த மடைந்தார்கள்.

இரண்டொரு மாதங்கள் சென்றன. மாரி காலமும் கழிந்தது. சுக்கிரீவன் தான் சொன்ன வார்த்தைக்கேற்ப வரவில்லை. அதனால், இராமர் கோபித்து, இலக்குமணனை அவனிடம் அனுப்பினார். இலக்குமணன் சென்று, பட்ட ணத்தைச் சமீபித்ததும், தாரை, இலக்குமணன் அடங்காக் கோபத்துடன் வந்திருப்பதைக் கண்டாள். உடனே

அவள் அவனுக்குப்பணிவான வார்த்தை கூறி இளையபெருமாள் கோபத்தைத்தணித்து, சுக்கிரீவனை உடனே போகுமாறு செய்தாள்.

சுக்கிரீவனும் காற்ருய்ப் பறந்து இராமரை யடிபணிந்து, "யான் மிகுந்த அபராதம் செய்துவிட்டேன். என்னை மன்னித்தருளவேண்டும். நான் நன்றி மறக்கவில்லை. 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றிகொன்றமகற்கு' என்பதை நன்கறிவேன். ஒற்றர்களை ஏவி, வானரச்சைனியத்தைத் திரட்டச் செய்திருக்கிறேன். வெகு சீக்கிரம் தேவியைத் தேடிவர ஏற்பாடு செய்கிறேன்," என்று வினயமாய்ப் பயபக்தியோடு கூறினன்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே இடிமுழக்கம் போலவும், கடற்பேரொலி போலவும் கூச்சலிட்டுக்கொண்டு, ஆகாயத்தில் தூளி கிளம்ப, வானரச்சைனியம் வந்து சேர்ந்தது. அதனைக் கண்ட இராமலக்ஷ்மணர்கள் ஆனந்த மடைந்தார்கள்.

இராமருத்தரவு பெற்றுச் சுக்கிரீவன் சேனைத்தலைவர்களை யழைத்து, நான்கு திக்குகளிலுஞ் சென்று சீதாபிராட்டியைத்தேடிவர ஆஞ்ஞாபித்தான். அவர்களில் அங்கதன், அனுமன், ஜாம்பவான் முதலியோர் தென்திசை செல்லும்படி உத்தரவிடப்பட்டார்கள். அதனல், ஹனுமான் சுக்கிரீவனிடத்துப் பல தந்திரங்களையும் இராமரிடத்துப் பல இரகசியங்களையும் கேட்டுக்கொண்டு, இராகவரது கணையாழியையும் பெற்றுப் புறப்பட்டான். தென்திசை சென்றவர் தவிர, மற்றையோரெல்லாம் தேவியைப் பலவிடங்களிலும் தேடிக் காணமல் தங்களால் இனிமுடியாது என்று திரும்பிவிட்டார்கள்.

தென்திசை போனவீரர்கள் வெகுநாள்வரை அலைந்து தேடியும் காரியம் கை கூடாமல் திகைத்துச் செய்வது இன்னதென வறியாமல், தாகத்தினலும் பசியினலும் தவித்து, ஒரு மலைக் குகையை யடைந்தார்கள்; ஆங்குக் காணப்பட்டதொரு ஓடையில் தண்ணீர் பருகி, மரங்களி லுள்ள கனிகளைத் தின்று, ஒருவாறு களை தீர்ந்து, சுற்றிப் பார்க்கையில் சுயம்பிரபையைக் கண்டார்கள். அவர்கள் அவளைப் பிராட்டியென ஐயமுற்று, இராம நாமோச்சா ரணம் செய்தார்கள். அத்தாரக மந்திரம் காதில் விழவே, அவள் தன் சாபம் நீங்கித் தேவலோக மடைந்தாள்.

அங்குமின்றும் புறப்பட்டு வானர வீரர்கள் மற்றும் பலவிடங்களில் தேடினர்கள்; பிரயோஜனப்படாதது கண்டு அவர்கள், "பார்க்க முடியவில்லை என்று திரும்புவதைக் காட்டிலும் உயிர்விடுதல் மேலானது," என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

இங்ஙனம் அவர்கள் பேசிக்கொண்ட விஷயம் இன்ன தென உணர்ந்த ஜடாயுவின் தமையனை சம்பாதி, "வீரர் களே, இதற்கு என் வருந்துகிறீர்கள்? சீதை அசோக வனத்தில் இராவணனல் சிறை வைக்கப்பட்டு, இராக்ஷஸி களுக்கிடையில் உட்கார்ந்திருக்கிருள். அதோ பாருங் கள்!" என்றுன். வானர வீரர்கள் அளவிலாத ஆனந்த மடைந்து கூத்தாடினர்கள். உடனே எல்லோரும் சமுத் திரக் கரையை நோக்கி ஓடினர்கள்.

## 14. அசோக வனம்

சமுத்திரக்கரை வந்து சேர்ந்து வானரவீரர்கள் தங்களுக்குள் கடலைத் தாண்டிச் செல்லும் ஆற்றல் யாருக்கு உண்டு என ஆலோசித்துக்கொண் டிருக்கையில், ஜாம்பவான், வெகுகாலத்துப்புலி யாதலால் சமயமறிந்து, "வாயு குமாரனும், அஞ்சனையின் அருமந்த மகனும், சூரியனைப் பழமாகக்கருதிய பராக்கிரமசாலியும், கல்விக்களஞ்சியமும் சிரஞ்சீவியுமான அனுமான் இங்கிருக்க, நீங்கள் ஏன் வருந்தவேண்டும்? தெரியாமலா இராமர் அவனிடம் கணையாழியைக் கொடுத்தார். இக்கடலைத் தாண்டுவது அவன் வலிமைக்கு எம்மாத்திரம்?" என்று வெகுவாக அனுமானது பராக்கிரமத்தை எடுத்துப் புகழ்ந்தான்.

இவ்வாறு ஜாம்பவானால் புகழப்பெற்ற அனுமான், தன் வலிமையை யுணர்ந்தான்; தன்னை மறந்தான்; இராம நாமத்தை ஜபித்தான்; தேவியைத்தியானித்தான்; சிநேகிதரிடம் விடைபெற்றான்; விசுவரூபம் கொண்டான். மகேந்திர மலையினின்று பாய்ந்து, இராம பாணம்போல ஆகாய வீதியிற் சென்றான்; வழியில் தனக்கு இடையூறாகத் தோன்றிய சுரசைமுதலிய அரக்கிகளைக் கொன்று ஜயங்கொண்டு ஆஞ்சநேயன் இலங்கைக்கருகில் ஒரு பவள மலையின்மேல் குதித்தான்.

ஆங்கிருந்து புறப்பட்டு இலங்கையின் வளப்பத்தையும் சிறப்பையும் கண்டு வியந்துகொண்டே, அனுமான்,

'கறங்கு கால்புகா ; கதிரவன் ஒளிபுகா ; மறலி
மறம்பு கா(து);இனி வானவர் புகார்என்கை வம்பே.'

என்றபடி பலமாய் அமைக்கப்பட்ட மதில் வாயிலை யடைந்தான். அடைந்ததும்,

"எட்டுத் தோளாள், நாலு முகத்தாள், உலகேழும்
தொட்டுப் பேரும் சோதி நிறத்தாள், சுழல் கண்ணள்,
முட்டிப் பேரின் மூவுல கத்தை முதலோடும்
கட்டிச் சீறும் காவல் வலத்தாள், கமையில்லாள்;

"வேல்வாள் சூலம் வெங்கதை பாசம் விளிசங்கம்
கோல்வாள் குந்தம் கொண்ட கரத்தாள், வடகுன்றம்
போல்வாள், திங்கள் போழின் எயிற்றாள்; புகைவாயில்
கால்வாள், காணில் காலனும் உட்கும் கதமிக்காள்."

ஆகிய இலங்கணி என்னும் அரக்கி, "நில்லாய்! நில்லாய்!" என்று அனுமனை எதிர்த்துவர, அவன் அவளை ஒரே குத்தினால்கொன்று வீழ்த்தி, நகரத்தினுட் புகுந்து, ஆத்துறு சாலைதோறும், ஆனையின் கூடந் தோறும், மாத்துறு மாடந் தோறும், வாசியின் பந்தி தோறும், காத்துறு கடைகள் தோறும், கருங்கடல் கடந்த காலால் பூத்தொறும் வாவிச் செல்லும் பொறிவரி வண்டிற் போனான்; ஓரிடம் பாக்கி விடாமல் எங்கும் தேடினான்; ஸீதையைக்காணாமல் கஷ்டமடைந்தான்.

பிறகு ஒருவாறு தேறி அனுமான், இராம நாமத்தைத் தியானித்துக் கண்ணைத் திறந்தான். அசோக வனந் தென்பட்டது; உடனே ஆங்குச் சென்று மரங்கள்தோறும் ஜாதி சுபாவப்படி தாண்டிச் சென்று, ஓர் உயர்ந்த சிஞ்சுபா விருக்ஷத்தில் உட்கார்ந்துகொண்டு,

"கன்னல்ஆல் அத்தி பாலை காஞ்சிரம் இலுப்பை வேம்பு
புன்னைசாம் பிராணி வேங்கை புன்குமந் தாரை மூங்கில்

வன்னிசண் பகம்ல வங்கம் மரகதம் வயிரம் ஆச்சா
தென்னுருத் திராக்க நல்லி தேக்குப்பா திரிப லாவும்''

ஆகிய விருக்ஷ ஜாதிகளும்,

'வாழைமா தென்னை கொய்யா மாதுளை பன்னீர் நெல்லி
காழிய சந்தம் நார்த்தை கமுகரு நெல்லி மிச்சை''

முதலிய கனி தரு மரங்களும்,

''தாழைசெண் பகம்சீர் மல்லி தாமரை முல்லை யல்லி
ஆழிய குவளை ரோசா அவிரிரு வாட்சி யாதி''

பூத்தரு மரஞ் செடி கொடிகளும்,

''சக்கர வாகப் புள்ளுஞ் சாதகஞ் சிகிச கோரம்
குக்குடந் தாரா அன்னங் கோகிலங் கிள்ளை காகம்
கொக்குடன் கல்லி நாரை கூளிபே ராந்தை கூகை
தக்கவல் லூறு டன்ரா சாளிபல் பறவை யோகம்''

ஆகிய இவை நிறைந்த அசோகவனத்தின் காட்சியைக்கண்டு வியந்து, நாநா பக்கமும் சுற்றிப் பார்த்தான்.

ஒருபால் ஒரு மரத்தடியில் ஸ்வர்ண விக்கிரகம்போலும், மாசுண்ட மணிபோலும் அங்கம் மெலிந்து, புழுதி படிந்த கூந்தலோடு, அன்னை ஜானகி,

'வயிற்றிடை வாயினர், வளைந்த நெற்றியின்
குயிற்றிய விழியினர், கொடிய நோக்கினர்,
எயிற்றினுக் (கு) இடைஇடை யானை யாளிபேய்
துயில்கொள்வெம் பிலன்எனத் தொட்ட வாயினர்,
'ஒருபது கையினர், ஒற்றைச் சென்னியர்,
இருபது தலையினர், இரண்டு கையினர்,
கரிபரி வேங்கைமாக் கரடி யாளிபேய்
அரிநரி நாய்என வணிமு கத்தினர்,

வெரிநுறு முகத்தினர், விழிகள் மூன்றினர்,
புரிதரு கொடுமையர், புகையும் வாயினர்'

ஆகிய பல விகார ரூபமுள்ள அரக்கிகளுக்கு மத்தியில் பல புலிகளுக்கிடையில் அகப்பட்ட மான்போலக் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வடியச் சோக ஸாகரத்தில் மூழ்கி யிருக்கக் கண்டனன் அனுமான்.

---

## 15. அரக்கனது வீண் முயற்சி

அச்சமயம் அரக்கர் ஏந்தல், சர்வாபரண அலங்கிருத னுய், உருப்பசி உடைவாளெடுப்ப, மேனகை வெள்ளடை யுதவ, செருப்பினைத் தாங்கித் திலோத்தமை செல்ல, அரம்பையர் குழாம் புடை சூழ, வெகு ஆடம்பரத்துடன் சென்று, ஸீதையுறை யிடமணுகி, "பெண்ணே, நான் குலத் தினும், கல்வியிலும், பராக்கிரமத்திலும், புத்திர சம்பத்தி லும், ஐசுவரியத்திலும் மிகுந்தவன். ஆதலின், உனக்கு என்னைப்போன்ற பாக்கியவான் கிடைப்பது அரிது. சற் றுத் தயை செய். இன்றேல் உன்னையும் உன்னைச் சேர்ந்த வர்களையும் நாசஞ் செய்து விடுவேன்!" என்று பலவாற நயமாயும் பயமாயுங் கூறினன்.

அவனைக் கண்ட மாத்திரத்திலே கூசி ஆவி குலைவுறுட ஜானகியின் காதில் காய்ந்த சலாகையன்ன அவன் உரை கள் நுழைய, அக்கொடியோனைப் பார்க்கவும் பொருமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு, ஒரு துரும்பைக் கிள்ளிக் கீழேபோட்டு, "அடே அறிவிலி, என் வீணே கெடுகிருய்? நீயும், உன் செல்வமும் இத்துரும்பும் சரி. நெறியறிந்

லாத நீசா, நாச காலங் கிட்டி விட்டது போலும்!" என்று தேவி அரக்கனைத் துச்சமாய்ப் பேசினாள்.

உடனே கண்களில் தீப்பொறி பறக்க, வாய்களிற் புகை 'குப்' 'குப்'பென்று வர, ஆசையும் கோபமும் தன்னை அலைக்கழிக்க, இராவணன், "உன்னைக் கடித்துத் தின்னுகிறேன் பார்!" என்று கத்திக்கொண்டு, உருவின வாளும் கையுமாய் ஜானகியை யணுகி, "உன்னைக் கொல்லுகிறது ரு பெருங்காரியமன்று. அன்றைக்கே உன் நாயகனைக் கான்றிருப்பேன். வீணாக நீ இறந்துவிடுவாயே என்று நான் வஞ்சனையால் உன்னைக் கொண்டுவந்தேன். தேவேந்திரன் எனக்குப் பணி செய்கின்றான். நானே மூன்றுலகத்தையும் ஆண்டு வருகின்றேன். எல்லோரும் எனக்கு ரவல் செய்யவேண்டுமே ஒழிய, என்னை வெல்லுகிறவரும் உலகிலுண்டோ? அற்ப ஆயுளையுடைய இந்த ராமலக்ஷ்மணர்களைக் கொல்வது எனக்கு எம்மாத்திரம்? நீ யான் சொல்லும் வண்ணம் கேட்காத பக்ஷத்தில் அயோத்தி, மிதிலை முதலிய இடங்களில் உள்ள உன்னைச் சேர்ந்தவர்களை எல்லாம் கருவறுத்துவிட்டு, உன்னையும் ஒரு நொடியில் மாய்ப்பேன். என்னை யார் என்று நினைத்தாய்?" என்று அதட்டிப் பேசி, அவ்விடம் விட்டு விலகி, அரக்கிகளை நோக்கி, "இன்னுஞ் சில தினங்களில் இவளை என் வசமாம்படி செய்யத் தவறுவீரானால் உமக்கு யான் நஞ்சு ஆவேன்!" என உணர்த்திப் போனான். அதன்படி யரக்கிகளும் சீதையை வருத்தத் தொடங்கினார்கள்.

சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கிக்கொண்டிருந்த திரிசடை கனக்கண்டு திடுக்கிட்டெழுந்து, அரக்கிகளை நோக்கி, "நான் ஒரு தீய கனவு கண்டேன். அதன் பலனை யாரா

யின் இந்நகரமும் அரக்கர் குலமும் இன்ருேடு அழிவடைந் தன என்று தோன்றுகிறது. ஆதலால், இதோ இருக்கும் ஜகன்மாதாவை எல்லோரும் வணங்கி மன்னிப்புக் கேளுங் கள். இல்லையேல், நீங்கள் அழிவது திண்ணம்,'' என்ருள். உடனே எல்லோரும் திகிலடைந்து, அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர்.

அரக்கிகள் வெகு நேரங் கழித்துச் சற்றுக் கண்ண யர்ந்தார்கள். ஸீதை வருத்தத்திஞற் பலவாறு அழுது புலம்பி, எண்ணுத எண்ணமெலாம் எண்ணி யெண்ணி நெஞ் சம் புண்ணுகி, "நாம் இங்கு இனி உயிருடன் இருப்பது தவறு. அரக்கன் கையிலகப்பட்டு வருந்துவதைவிட இறப் பதே மேலானது,'' என நினைத்து, இராம நாமத்தை ஜபித்துத் தன் கூந்தலை அசோகமரத்திஞெரு கிளையிலும் தன் கழுத்திலும் சுற்றி முடித்துக்கொண்டு இறக்கச் சித்த மாயினள்.

இவ்வாறு தேவியின் வருத்தத்தையும், கற்பின் மேன் மையையும், இராம பக்தியையும் கண்ட வாயு குமாரன், "இனிக் கணமேனும் தாமதித்தல் கூடாது. மோசம் வந்து விடும். நாம் வந்த காரியமும் கெட்டுவிடும்,'' என்று நிச் சயித்து, இதுவே தக்க சமயமென வறிந்து, ஸ்ரீ ராமநாமத் தைத் தேவி காதில் விழுமாறு உச்சரித்தான். இராம நாமம் காதில் விழவும், தேவி தான் கொண்ட எண்ணத்தை ஒதுக் கித் தள்ளித் திரும்பிப் பார்த்தாள்.

உடனே ஆஞ்சநேயன், "அண்டர் நாயகர் அருள் தூதன் யான். தங்களைத் தேடியே இங்கு ஐயர் ஆணையால் அடைந்தேன். தங்கள் கவலை இன்ருேடு ஒழிந்தது. இராக்ஷ ஸர்களும் ஒழிந்தார்கள். ஐயுறல் வேண்டா; உமது அடை

யாளம்; ஆரியர் மெய்யுறவுணர்த்திய உரையும் வேறுள," என்று கூறிச் சீதையை இராகவர் பிரிந்தது முதல் தான் தேவியைக் கண்டதுவரை சகல சமாசாரங்களையும் ஆதியோடந்தமாய்த் தெரிவித்துக் கையில் கணையாழியையும் கொடுத்தான்.

அதனைப் பெற்றுக் கொண்ட சீதை,

"வாங்கிய வாழி தன்னை வஞ்சரூர் வந்த தாமென்(று)
ஆங்குயர் மழைக்கண் ணீரால் ஆயிரம் கலச மாட்டி
ஏங்கினள் இருந்த தல்லால் இயம்பலள் எய்த்த மேனி
வீங்கினள், வியந்த தல்லால் இமைத்திலள் உயிர்ப்பு விட்டாள்."

பிறகு அன்னை ஜானகி, இறுதியின் உயிர் தரும் மருந்தொத்த ஆழியைப் பெற்றதனால், இழந்த மணி புற்றரவு பெற்றதெனவும், பழந்தன மிழந்தவர் மீட்டும் அது பெற்றது போலவும், குழந்தையை யுயிர்த்த மலடிபோலவும் சந்தோஷம் அடைந்து, அனுமனைப் பலவாறு புகழ்ந்து, "பணைத்தோள் வீர, ஊழியோர் பகலாயோதும் யாண்டெலாம் உலக மேழும் வீவுற்ற ஞான்றும் வீவுஇன்றென இருத்தி," என்றாசீர்வதித்தாள்.

அனுமன் அன்னையின் அடி வணங்கி, "இனிச் செய்ய வேண்டுவதியாது?" எனலும், தன் நாதருக்குக் கூறவேண்டிய விஷயங்களையும் சில அடையாளங்களையும் மாருதிக்குக் கூறி,

"சூடை யின்மணி கண்மணி யொப்பன தொன்னுள்
ஆடை யின்கண் இருந்தது பேரடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய நம்பா,
கோடி யென்று கொடுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்."

தூதனும் அதனைத் தொழுது வாங்கி, முற்றப் பழுதுருவகை பந்தனை செய்து, வந்தித்து, அழுது, மும்மை வலங்கொடு இறைஞ்சி, விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டனன்.

---

## 16. அசோக வன அழிவு

இவ்வாறு விடைபெற்றுப் புறப்பட்ட ஆண்டகை தன் விசுவரூபங்கொண்டு, அன்று உலகை எயிற்றிடைக்கொள் ஏனமென, சோக நிவர்த்தி செய்யும்படியான அசோக வனத்தை யடிகொடு துவைத்து அழித்தான்; மாளிகைகளை யிடித்தான்; எதிர்த்தவரை எமனுலகம் ஏற்றினன். இராவணன் இச்செய்தி யறிந்து, அரக்கர்களைக் கூட்டங் கூட்டமாக அனுப்ப, அவர்களை யெல்லாம் ஒரு நொடியில் நாசஞ் செய்து, அஷ்டதிக்கஜங்களும் தேவர்களும் பயந்து ஓட, அரக்கிமார்கள் சூல் வயிறு உடைந்து சோர, அண்டமும் பிளந்து விண்டதாமென அனுமன் ஆர்த்தான்.

இந்தக் கர்ஜனையானது இராவணன் குருமணி மகுட கோடி முடித்தலை குலுங்கும் வண்ணம் இருபது செவியினூடும் நுழையவே, அவன் எண்ணிறந்த கிங்கரர்களை ஏவி, "கொல்லலீர், குரங்கைப்பற்றிக் கொணர்திர்," என்றான். உடனே அவர்கள் சென்று எதிர்க்க, மாருதி அவர்களை ஒரு மரத்தின லடித்தொழித்துச் சிங்கநாதம் செய்து நின்றான்.

பின்னர் இலங்காதிபன் பக்கலில் நின்ற சம்புமாலியைப் பார்த்து, "வாம்பரித்தானையோடு வளைத்து அக்குரங்கின் மறனை மாற்றத் தாம்பினிற் பற்றித் தந்து என் சினம் தணித்தி," என்றான்.

அரக்கன் சொல்லி முடிக்கு முன்னமே சம்புமாலி சேனையுடன் புறப்பட்டு வானரவீரனை எதிர்க்க, அவன் கரிகளைக்கொண்டு கரிகளையும், பரிகளைக்கொண்டு பரிகளையும், வீரர்களைக்கொண்டு வீரர்களையும் தேர்களைக்கொண்டு தேர்களையும் புடைத்துச் சம்புமாலியையும் வதைத்து, மூளையும் உதிரமும் குழம்புபோல யுத்தகளம் நிறையச் செய்தான். அரக்கர் கோன் கொண்ட கோபத்திற்கு அளவேயில்லை. உடனே பஞ்ச சேனாபதிகள் புறப்பட்டார்கள். அரக்கர் தானையும் எழுந்தது. மலைகளை நகுந்தடமார்பர்; கடல்அலைகளை நகு நெடுந்தோளர்; அந்தகன் கொலைகளை நகு நெடுங் கொலையர்; கொல்லன் ஊதுலைகளை நகும் அனல் உமிழுங் கண்ணினர்—இத்தகைய அரக்கரைப் பார்த்து, ஆஞ்சநேயன் தன் தோளையும் பார்த்தான்; மீயுயர் விசும்பையும் கடக்க வீங்கினன். அரக்கர்களும் படைகளைப் பிரயோகித்தார்கள். கரிகளை யுதைத்து, புரவிகளை மிதித்து, தேர்களைத் தேய்த்து வீரரை வதைத்துத் திரண்டுயர் தோளிணை யஞ்சனை சிங்கம் விண்ணுறைபவர்களும் அஞ்ச அருக்கனே போல நின்றான்.

பிறகு ஒற்றர் ஓடி இராவணனை யண்மி, "தானையும் உலர்ந்தது; ஐவர் தலைவரும் மடிந்தார்," என்னலும், அக்ஷகுமாரன் தந்தையை யடிதொழுது விடைபெற்று யுத்த சன்னத்தனாய்ப் புறப்பட்டு, வானர வீரனை எதிர்த்தான். கொடிய யுத்தம் தொடங்கியது. விண்ணும் மண்ணும் சலித்தன; அக்ஷகுமாரனை அனுமன் தன் வயிரக் கையால் ஒரு குத்துக்குத்திக் கொன்று ஒரு குதி குதித்து நின்றான்.

இவ்வாறு ஒரு குரங்கினால் தன் தம்பியும் தன் தந்தை புகழும் தேய்ந்ததை நினைத்து மனங் கொதித்த இந்திர

சித்து இரதம் ஏறிச் சேனைகள் புடை சூழ வருவதை வனை கழலனுமன் நோக்கினன்; உடனே வெகுண்டு, ஒரு மராமரம் கைக்கொண்டு, ரத கஜ துரக பதாதியென்ற யாவையும் ஒழித்து நின்றான். நின்ற அனுமன்மீது இந்திரஜித்து வில் வாள் வேல் முதலியன விடுத்து, ஒன்றும் பலியாதது கண்டு, நான்முகன் படைக்கலம் கையிற் கொண்டு விட்டவுடனே அப்படை சென்று திருக, மாருதி, சதுமுகன் படையெனுந்தன்மை ஆய்ந்து, அதன் ஆணையை அவமதித்தல் தகாதென வெண்ணிக் கீழே சாய்ந்து, கண் மூடியிருந்தான். அதுகண்ட அரக்கர், "ஓய்ந்தது இவன் வலி!" என்றார்த்தனர்.

"குரக்கு நல்வலங் குறைந்த(து)என் றுவலங் கொட்டி
இரைக்கு மாநகர் எறிகட லொத்ததெம் மருங்கும்
திரைக்கு யாசுணம் வாசுகி ஒத்தது தேவர்
அரக்க ரொத்தனர் மந்தரம் ஒத்தனன் அனுமன்."

---

## 17. இலங்கா தகனம்

இந்திரனை வென்ற இந்திரஜித்து, சேனைகள் புடைசூழ வானர வீரனைத் தன் தந்தையிடம் கொண்டு போயினன். உலகொரு மூன்றையும் தன் தவப் பயனா லரசாள்கின்றான் இருந்தவப் பெருங்கோயில் சென்றெய்தி, சந்திரனையொத்த வெண்கொற்றக் குடை நிழற்ற, உரகர் கோன் இனிதரசு வீற்றிருந்தனன் என்ன, ஈரேழு உலகமும் நடுங்க, தேவர்கள், முனிவர்கள், அரக்கர்கள் புடை சூழ, அரம்பையர்கள் கீதம் பாட, அரியணைமீது மணிமுடி தரித்த தன் பத்துத் தலைகளும் விளங்க, இனிதிருந்த எண்டிசைக்

கிழவனை மாருதி கண்டான்; தன் மனத்துட் பலவாறு ஆலோசித்து அரக்கனை என்ன செய்யலாமென்று ஆராய்வானுனன்.

அதற்குள், இலங்காதிபன் வீரனை நோக்கி, "காலனே? இந்திரனே? பூதமோ? பிசாசமோ? யாவன் நீ? இங்கெய்து காரணம் என்னை? ஆர் உனை விடுத்தவர்?" என்று அதட்டினன்.

"நீ சொல்லிய அனைவருமல்லன்; அல்லியம் கமலமே யன்ன செங்கணோர் வில்லிதன் தூதன் யான்; இலங்கை மேயினேன் அனையவன் யாரென அறிதி:

"அறந்தலை நிறுத்தி, வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந்(து) உலகம் பூணச் செந்நெறி செலுத்தித்தீயோர்,
இறந்துக நூறித் தக்கோர் இடர்துடைத்(து) ஏக விண்டு
பிறந்தனன்; தன்பொற் பாத மேத்துவார் பிறப்ப றுப்பான்."

அன்னவற்கு அடிமை செய்வேன்; நாமமும் அனுமன்; சீதையைத் தேடி வந்தனன்; வாலியின் குமரன் அங்கதன் தூதன் யான். வாலியும் ஒழிந்தான்; அவன் வாலும் இங்கில்லை. பயப்படவேண்டா. ஆயினும், ஒன்று கூறுகிறேன்: நீ செய்கிறது உன் குலத்திற்கும் உன் தவத்திற்கும் அழகன்று. தேவியைச் சிறையில் வைத்தாய்! தேவரை இடுக்கண் செய்தாய்! பூசுரர்க்கு அலக்கண் ஈந்தாய்! மன்னுயிர் புடைத்துத் தின்றாய்! வாசவன் திருவும் கொண்டாய்! வழியலா வழிமேற் சென்றாய்! இவையெல்லாம் கிடக்கட்டும். இனியாவது உன் அரும்பெறற் செல்வமும் கிளையும் உயிரும் பெற விரும்பின் சீதையைக் கொண்டு போய் விட்டுவிடு," என்று மொழிந்தான் அஞ்சனை யருந்தவப் புதல்வன்.

இதனைச் செவியுற்ற அரக்கன், "நமக்கும் ஒரு குரங்கு புத்தி சொல்ல நேரிட்டதே! நன்று! நன்று!!" என்ன நகைத்து, "அடா வானரமே! தூதனென வந்தான் அரக்கரைக் கொன்றது எவன்?" என, இராகவர் தூதன், "காட்டு வாரின்மையால் கடி காவினை வாட்டினேன்; என்னைக் கொல்ல வந்தார்களை வீட்டினேன்; உன்னைக் காணுமெண்ணத்தால் இவ்விடம் வந்தெய்தினேன்," என்றான்.

இவ்வுரைகளைக் கேட்டதும் ஆஜ்யாகுதி செய்த அக்கினி போலக் கோபத்தீயானது பொங்கி எழ, இராவணன் பக்கத்திருந்தாரை நோக்கி, "இக்குரங்கை இக்கணமே கொல்லுங்கள்," என, விபீஷணன் தடுத்து, நீதி கூறி, "தூதனைக் கொல்லுதல் முறை யல்ல. வேறு ஏதேனும் சிக்ஷை செய்க," என, இராவணன் உத்தரவுப்படி குரங்குகளுக்கு விசேஷ அங்கமாகிய வாலில் கந்தையைச் சுற்றி எண்ணெய் அபிஷேகம் செய்து, நெருப்பை வைத்துத் தெருவெங்கும் அழைத்துச் சென்றார்கள். ஆஞ்சநேயனும், "நமக்கு நெருப்புத் தேடவேண்டிய அவசியமில்லை. தெருக்களும் பாக்கியில்லை. தன் வினை தன்னைச்சுடும்; வால்வினை வள நகரைச்சுடும்," என நினைந்து, சந்தோஷமாக வாலைச்சுழற்றி விளையாடி, நகரத்தில் நாநாபக்கத்திலும் ஓடி, மாளிகைகள், அரண்மனைகள், கோட்டைகள், வீடுகள், கோபுரங்கள் எல்லாவற்றிலும் வாலை நுழைத்துத் தீயை வைத்துத் தன் தகப்பன் சிநேகிதனான அக்கினி பகவானுக்கு நல் விருந்தளித்துக் களிப்பெனும் கடலில் மூழ்கினான்.

உடனே அன்னை ஜானகியின் ஞாபகம் வர, மாருதி ஒரு நொடியில் மீண்டுங் கடலைத் தாண்டித் தன் சிநேகிதர்களையடைந்து, "கண்டேன் சீதையை!" எனக் குதித்தான்.

இதனைக் கேட்ட ஜாம்பவான் முதலியோர் தம்மைத் தாம் மறந்தார்; ஆனந்தமடைந்தார்; மதுவனத்தை யடைந்து அதனை யழித்துக் கனிகளைத் தின்று, தேனை வாரி வாரி யுண்டு, களிப்புடனே கிட்கிந்தை வந்து சேர்ந்தார்.

அனுமான், இராகவரிடம் ஓடோடியும் வந்து, திருவடி தொழுது, கையில் சூடாமணியும், வாயில் "கண்டேன் ஸீதையை" என்னும் சொல்லுமாக நின்று, பெரிதும் பிராட்டியைப் புகழ்ந்து, மணிக்கரசை நீட்டினன். வாங்கினர் இராகவர்.

"பொடித்தன உரோமம், போந்து பொழிந்தன கண்ணீர் [பொங்கித்
துடித்தன மார்பும் தோளும்; தோன்றின வியர்வின் துள்ளி;
மடித்தது மணிவாய்; ஆவி வருவது போவ தாகித்
தடித்தது மேனி; என்னே யாருளார் தன்மை தேர்வார்?

"ஆயிடைக் கவிக ளோடும் அங்கதன் முதலின் ஆயோர்
மேயினர் வணங்கிப் புக்கார் வீரனைக் கவியின் வேந்தைப்
போயின கரும முற்றிப் புகுந்ததோர் பொம்மல் தன்னால்
சேய்இரு மதியம் எனனத் திகழ்தரு முகத்தர் ஆனர்."

---

## 18. போர் முழக்கம்

சூரிய புத்திரன், இராகவரை நோக்கி, "ஐய, அரிவை நம்மால் காண்டலுக்கு எளியள் ஆனள் என்று கேட்ட பிறகும் நாம் சும்மாவிருக்கலாமா? எழுந்திருங்கள்! புறப் படுங்கள் சீக்கிரம்! இனிக் கணமும் தாமதம் கூடாது," என்றான்.

உடனே நன்முகூர்த்தம் பார்த்துச் சுக்கிரீவனது ஆஞ் ஞைப்பிரகாரம் எழுபத்து நான்காயிரம் வானர ஸைந்யம்

திரள்திரளாய் இலங்கையை நோக்கிப் புறப்பட்டன. நீலன் சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். சேனையும் பரந்து சென்று கடற்கரை யடைந்தன.

இச்சமாசாரம் இராவணன் காதில் விழவும், மந்திரி முதலானவர்களை யழைத்துச் சபை கூட்டி ஆலோசனை செய்யத் தொடங்கினான். அவர் அவர்கள், அவர் அவர்களுக்குத் தோன்றியதைக் கூறினார்கள். கும்பகர்ணன் ஒரே வார்த்தையாக, "அண்ணே, நீங்கள் செய்தகாரியம் ஒழுங்கன்று. சீதையை இப்போதே கொண்டுபோய்விட்டுவிடுங்கள். இன்றேல், நாம் குலத்தோடு நாசமடைவது திண்ணம்," என்று சொல்லி, எழுந்து தூங்கப்போய்விட்டான்.

பிறகு விபீஷணன் எழுந்து பணிந்து, "சீதை கேவலம் பெண்ணல்லள். சாமானியமாக வெண்ணாதீர். சில நாளைக்கு முன்பு ஒரு குரங்கு வந்து இலங்கையை அதம் செய்தது. ஒன்றே அந்தப்பாடு படுத்தியது. இப்போது வந்திருப்பனவோ எழுபது வெள்ளம் குரங்குகளாம். போதும்; வேண்டா; விட்டுவிடும் சீதையை," என்று பலவாறாகத் தேவியின் பெருமையையும், இராமபிரானின் தோள் வலிமையினையும், ஆஞ்சனேயனது அபார சாமர்த்தியத்தையும் எடுத்துக்கூறியும் கேளாமல், "கேடுவரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே," என்பதற்கிணங்க, இராவணன் கோபங் கொண்டு வாளை உருவி, விபீஷணனை வெட்டச் சென்றான்.

அது கண்ட விபீஷணன் ஓட்டமாக ஓடி, ஆகாய மார்க்கமாய்க் கடற்கரைசென்று இராமரைச் சரணமடைய அனுமான் விபீஷணன் நற்குணங்களையும் இராமபக்தியையும் எடுத்துக்கூற, இராகவரும் அன்புடன் அவனை யாத

ரித்து, அபயம் அருளித் தமக்கு 'சரணுகத வத்ஸலர்' எனும் பெயரையும் நிலை நிறுத்திக்கொண்டார்.

பிறகு இராமர் தர்ப்பசயனத்திற் கிடந்து, வருணமந்திரம் ஜபித்தும்வருணன் வராதது கண்டு, கோபங்கொண்டிருந்த வேலை, நீர்க்கடவுள் ஓடி வந்து வணங்கி,

"ஆழிநீ அனலும் நீயே யல்லவை எல்லா நீயே
ஊழிநீ உலகு நீயே அவற்றுறை உயிரு நீயே
ஆழியாய் அடியேன் நின்னை மறப்பனே வயங்கு செந்தீச்
சூழுற உலைந்து போனேன் காத்தருள் சுருதி மூர்த்தி."

என்று துதித்தான்.

உடனே பிரானுரின் கட்டளைப்படி நளன் என்னும் வானரத் தச்சன் வானரங்களின் உதவியினுல் கற்பாறைகளையும் மரங்களையும் செடி கொடிகளையும் கொண்டு, நன்ருய் அணையைக் கட்டி முடித்து, ஐயர் சரணம் வணங்கி நின்ருன். இக்காரியத்தில் சிறு அணில்களும் தங்களாலியன்ற பணி செய்தன. இராகவர் வானரச் சைனியங்களுடன் அணைவழிச் சென்று, அக்கரை யடைந்தார்.

அதனையறிந்த ஒற்றர்கள் ஓடி இலங்கேசனிடம் சமாசாரம் அறிவித்தார்கள். மாலியவான் முதலிய பெரியார் அரக்கர் எந்தனுக்குப் பல விதமாய் இதங் கூறினர். அரக்கன் செவியில் அவை ஏறவில்லை. அவனது ஆக்கினைப் பிரகாரம் அரக்கர் சேனையானது ஆரவாரத்துடன் எழுந்து பொங்கிப் பரந்தது. அரக்கர்கள் தங்கள் வழக்கப்படி இருப்புலக்கை தண்டாயுதம் வேல் முதலியவைகளோடு இடி முழக்கம்போல் சப்தித்து அட்டகாசஞ் செய்தார்கள்.

இராவணன் மதயானைபோற் கோபமான பார்வையோடு கூடக் கோபுரமீது ஏறி நக்ஷத்திர கணங்களைப்

போலவும் கணக்கிலடங்காத வானரச்சைனியத்தைப்பார்த் தான். அதுசமயம் விபீஷ்ணுழ்வான், 'அவன்தான் இரா வணன்' எனச் சுட்டிக் காண்பிக்கச் சூரியகுமாரனுன சுக்கிரீ வன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, இராவணனது கிரீடங் களிலுள்ள ஜீவ ரத்தினங்களைப்பற்றிப் பறித்துக்கொண்டு வானரச்சேனையுட் குதித்து, இரகுநந்தனர் பாதாரவிந்தங் களில் சமர்ப்பித்து நின்றான்.

---

## 19. அங்கதன் தூது

கருணையங்கடலான ஸ்ரீராமர், விபீஷணன் முதலி யோரை நோக்கி, "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது: ஒரு தூதனை இராவணனிடமனுப்பி, "சீதையைவிடுகிறயா? ஏன் வீணே கெடுகிறுய்?" என்று கேட்பிப்போம். சீதையை அவன்விட்டுவிடும் பக்ஷத்தில்யுத்தத்தை நிறுத்திவிடுவோம்; இன்றேல், அவன் சிரம் விழுதல் திண்ணமே. இதுவே தரு மம்," என்ருர். உடனே ஆழ்வானும், சுக்கிரீவன் முதலி யோரும், "நன்று நன்று," என்று ஐயர் கருணையை வியக்க, இராகவர் அங்கதனை யழைத்து, "அங்கத, நீ இராவண னிடம் சென்று, 'சீதையைவிட்டுப் பிழைக்கப்போகிறுயா? சிரங்கள் துணிக்கப்பட்டு மாளப்போகிறுயா? உன் எண்ண மென்ன? இதுவரை யுத்தத்திற்கு வாராமல் ஒளிந்திருப் பது சூரர்களுக்கு அழகல்லவே!' என்று கூறிச் சமரசாரம் அறிந்து வா," என்ருர்.

உடனே அங்கதன் பிரானுரடி வணங்கி, மதிலைத் தாண்டி இராவணனிருக்கை எய்தினுன். அரக்கர் அவனைக் கண்டு, அனுமானெனப் பயந்து நடுங்கினர். இராவணன்

அங்கதனைப் பார்த்துக் கோபத்துடனே, "நீ யார்? வந்த காரியம் என்? சீக்கிரம் சொல். இன்றேல், இவ்வரக்கர்கள் உன்னைக் கொன்று தின்றுவிடுவார்கள்," என்றான்.

அங்கதன் அரக்கன் வார்த்தையைக் கேட்டு நகைத்து, "நான் சகல லோக நாயகரான ஸ்ரீராமருடைய தூதன்; மிகுந்த பராக்கிரமசாலியான வாலி புத்திரன்," என்றான். உடனே இராவணன், "உன் தகப்பன் எனக்குச் சினேகிதன். நீ இம்மனிதருக்குத் தூது வரலாமா? உன் தகப்பனைக் கொன்றவனை நீ கும்பிட்டுத் திரியவும் நினைத்தாயே! உன் இராஜ்யத்திற்கு உன்னை மகாராஜாவாக நானே முடி சூட்டுகிறேன். சுகமே யிருக்கலாம்," என்று கூறினான். அங்கதன் நகைத்து, "சிங்கமானது நாயிடமிருந்து மகுடாபிஷேகம் பெற்றதுபோல உன்னிடமிருந்தா நான் பட்டாபிஷேகம் பெறுவேன்? வெகு நன்று! நீ இப்போது சீதையை விட்டுவிட்டு இலங்கையை ஆள்கின்றனையா? இல்லாவிட்டால் போர்செய்து இராமர் கையால் மாள்கின்றனையா? இதுவரை எத்தனையோ விசேஷங்கள் நடந்தும் நீ ஒன்றுக்கும் வெளி வராமற் பதுங்கிக் கிடக்கின்றனையே! உன் வீரந்தான் என்னே! உன் தம்பியும் உன்னை விட்டுவிட்டான். நீயும் உன் மகுடங்களைப் பறி கொடுத்தாய். நீ திக்கு விஜயம் செய்து சம்பாதித்த கீர்த்தி இதுதானோ? நீ, இன்னும் இவ்வுலகி லிருக்க விரும்பினால், எங்களாண்டவர் ஆணைப்படி, பிராட்டியைவிட்டு, அவர் அடி வணங்கிச் சுகமே இரு. நிர்மூலமாக இறந்துவிட எண்ணமிருக்குமானால் என்னையர் கோட்டை வாயிலில் வில்லுங்கையுமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார். சீக்கிரம் வா என் பின்னால்," என்று இளைஞன் கூறலும், இராவணன் அடக்கமுடியாத கோபங்கொண்டான்.

அவன் வீரர்களை நோக்கி, "இக்குரங்கைப் பிடித்து மூளைசிதறத்தரையில் அடியுங்கள்," என்றுஞ்ஞாபித்தான்.

அரக்கனது கட்டளைப்பிரகாரம் நான்கு இராட்சத வீரர் அங்கதனைப் பிடிக்க வந்தனர். அவர்களை அங்கதன் தூக்கிக்கொண்டு, ஆகாயத்திற் கிளம்பி, அவர்கள் தலைகளைக்கிள்ளி யெறிந்து, "இராம சரம் கொடியது; தப்பாது. முன்னமே ஓடிப் பிழையுங்கள்," என்று கத்திக் கொண்டே இராகவர் பாதாரவிந்தங்களை யடைந்து வணங்கி, "சுவாமி, இராவணன் கொடியவன். அவன் தலைகளை அறுத்துத்தள்ளினாலொழிய, அவன் அக்கிரமம் ஒடுங்காது. யுத்தம்செய்தே தீரவேண்டும்," என்று பகர்ந்தனன்.

---

## 20. இராம இராவண யுத்தம்

வானரச் சைனியம் இலங்கையை வளைத்துக்கொள்ள, இரு புறத்திலும் போர் மூண்டது. அங்கதனும் இந்திரஜித்தும் யுத்தம் செய்து, அங்கதன் ஜய மடைந்தான். தூமிராக்ஷன் முதலிய பல அரக்கர் அழிந்தனர். இராவணன்றனது தேர், கொடி, கிரீடம் முதலியன அலங்கோலமடைந்து நிற்க, இராமர் அவனை நிராயுதபாணியாக்கி, "இன்று போய் நாளைவா," என்று அனுப்பினர். அவனும்,

"வாரணம் பொருத மார்பும் வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடிலங்கை புக்கான்."

புகுந்து தன்னிருக்கையடைந்து, தூக்கத்திற் பெயர் பெற்ற தனது தம்பி கும்பகர்ணனை இருப்புலக்கையினு

லடித்தும் குதிரைகளை யவன்மீது நடத்திக் கன்னத்தில் உலக்கைகளா லிடித்தும் எழுப்ப, கும்பகர்ணன், ஒருவாறு துயில் நீத்தெழுந்து, அறுநூறு சகடத்தடிசிலும் நூறு நூறு மதுக்குடங்களும் நுங்கினன்; பசி தணிந்ததும் இராவணனையண்மி, நடந்த விஷயங்களை அவன் கூறக் கேட்டு, "அண்ணா, தஞ்சமும் தருமமும் தகவுமேயவர்; வஞ்சமும் பாவமும் பொய்யுமே வல்லம் நாம். அறம் வெல்லும்; மறம் கொல்லும். இதிற் சந்தேகம் ஏன்? இக்கணமே தையலை விட்டு மையலை விட்டு அவரைச் சரணடைந்து நில்லும்," என்றான்.

என்றவளவிலே இராவணன் கண்கள் சிவந்து புகையத் தம்பியைப்பார்த்து, "கும்பகர்ணா, உன்னை இதற்காகக் கூப்பிடவில்லை. இனி நடப்பது நடக்கட்டும். என்னிலும் அறிவுடையவனோ நீ? கேவலம் மனிதர்களுக்குப் பயந்தனை போலும்! என் முன் நில்லாதே!" என மனமுளையக் கூறலும், கும்பகர்ணன், "மூத்தோர்சொற் கேட்பதும் இராமபாணத்திற்கு இலக்காவதும் மேல்" எனக்கொண்டு, "அண்ணா, உம்முடைய முகத்தில் நான் விழிப்பது இன்றோடு ஒழிந்தது; விடை கொடும்," என வெழுந்து, யுத்தகளஞ்சென்று, சுக்கிரீவனோடு போர்புரியச் சுக்கிரீவன் மூர்ச்சையுற்றுக் கீழேவிழுந்தான். அவனை த தன்கைகளால் வாரியெடுத்துக்கொண்டு சென்ற வழியில் மூர்ச்சை தெளிந்து தன் அறிவு பெறலும் சுக்கிரீவன் கும்பகர்ணனுடைய மூக்கினையும் காதினையும் கடித்து எடுத்துக்கொண்டு மாயமாய்ப் பறந்துபோய்விட்டான். அதனால், கோபங்கொண்டு மீண்டும் எதிர்த்து வந்த கும்பகர்ணன் தலையை இராகவர் தம் கைப்பாணத்தால் அறுத்துக் கடலிற் போட்டனர்.

பிறகு அதிகாயனும் போர் செய்து இறந்தான். இவற்றை யெல்லாம் கண்ட இராவணன் வருத்த மடைந்து, ஒரு புறத்து ஒதுங்கிக் கலங்கி யிருந்தான்.

இந்திரஜித்து, கலக்கமுற்ற பிதாவை யாற்றித்தேற்றி ஆனைமேற் செல்லும் சீயம்போல வானரச் சைனியத்துட் புக்கு அவைகளைச் சிதறியோடவடித்தான். தன்னோடு யுத்தம் செய்ய வந்த இலக்குவனை நாக பாசத்தாற் பிணிக்கப் பெரிய திருவடியாகிய கருடன் வந்து கட்டை யவிழ்த்தான். இந்திரஜித்து பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்யவே, இராமரும் அனுஜனும் மூர்ச்சை யடைந்தார்கள். அனுமான் விசுவ ரூபங் கொண்டு உயர்ந்து சென்று, மூலிகை நிறைந்த சஞ்சீவிப் பர்வதம் கொணர்ந்து, எல்லோரையும் மூர்ச்சை தெளிவித்தான்.

போரில் வெற்றி பெற இராவணன் நிகும்பலை யாகம் செய்தான். அதனைக் கேள்விப்பட்ட உடனே இலக்குமணன் ஆங்குச் சென்று யாகத்தை யழித்து, அவன் விரதத்தைக் குலைத்து, மேகநாதன் தலையையும் தனது பாணத்தால் அறுத்துத் தன் தமையனார் திருவடிகளின் பக்கத்திற் சேர்த்தான்.

அப்போது இராவணன் புத்திரன் மித்திரன் பந்து முதலிய எல்லோரையும் இழந்து, தன்னந் தனியனாய்த் தேற்றுவாரின்றிச் சோகமுற்றிருக்கத் தன் மனைவி கூறிய புத்தி மிக்க உரைகளையும் கொள்ளாமல் கோபங் கொண்டு,

'நகைபி றக்கின்ற வாயான் நாக்கொடு கடைவாய் நக்கிப்
புகைபி றக்கின்ற மூக்கன் பொறிபி றக்கின்ற கண்ணன்
மிகைபி றக்கின்ற நெஞ்சன் வெஞ்சி னத்தீமேல் வீங்கிச்
சிகைபி றக்கின்ற சொல்லன்"

ஆகி, அரசிருக்கை சேர்ந்தான்.

ஆங்கு மகோதரனுடன் பலமாய்ஆலோசித்துச் சேனே களை யடியோடு கூட்டிக்கொண்டு போர்க்கள மடைந்து, இராகவரை எதிர்க்க இருவருக்கும் கோரயுத்தம் நடந்தது.

அவர்கள் இருவரும்போர்புரிந்தது பாவமும் புண்ணிய மும், ஆதிசேடனும் கருடனும், நாரசிங்கமும் இரணியனும் பொருதாற்போல விருந்ததனுல், பிரமாதிதேவர்கள் நடுங் கினுர்கள். வரவர இராவணன் தளர்ச்சியுற, இராகவர் வலி யும் வீரமும் மிகுந்தன. அர்த்த சந்திர பாணத்தால் அரக் கன் தலைகளை அமலர் அறுத்துத் தள்ளினுர். அவை மீட் டும் முளைத்தெழுந்து இராகவரை யிகழ்ந்தன. கைகளையும் அறுத்துத் தள்ள அவைகளும் முன்போல் முளைத்தன.

இதனைக் கண்ட வீரர் மிகச் சினந்து, திக்கனைத்தும் விசும்பும் நடுங்க, பாணப்பிரயோகம் செய்தார். அவ்வாறு விடப்பட்ட புண்ணியர் புனித வாளி,

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும்
முதல்வன் முன்னுள்
எக்கோடி யாராலும் வெலப்படாய் எனக்கொடுத்த
வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடைந்த புயவலியும்
தின்று பார்ப்பிற்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போய்............."

பாற்கடலிற் குளித்து, இராமர் விற்புட்டிலிற்புக்கு ஒளித் தது. மரம் வெட்டி வீழ்த்தப்பட்டதுபோலத் தேரினின் றும் இராவணன் விழுந்தான். ஆகுலந் துறந்த தேவர்கள் மலரையள்ளிச் சொரிந்தார்கள். முனிவர்கள், 'ஜயவிஜயீபவ'

என ஆசி கூறினர்கள். வானர வீரர்கள் குதூகலித்தார்கள். அந்தர துந்துபி முழங்கிற்று.

இராமர் கட்டளைப்படி வீடணன் தன் தமையனுக்கும் மற்றைய அரக்கர்களுக்கும் ஈமக்கடன் முடித்துத் திருவடி தொழுது நிற்க, அவனை இராகவர் பல உபசாரங்கள் கூறித் தேற்றினர்.

---

## 21. விபீஷண பட்டாபிஷேகம்

யுத்தகளத்தினின்று புறப்பட்ட இராகவர் தம்பியை நோக்கி, "இலக்ஷ்மணா, இதோ நிற்கும் விபீஷணன் நமது அந்தரங்கபக்தன்; இராவணனுக்குப் பிறகு இலங்காராஜ்யத்தை யாளும் உரிமை பெற்றவன்; தரும புத்தி நிறைந்தவன்; ஸகல குண ஸம்பன்னன். ஆகையால், க்ஷணமும் தாமதமின்றி ஜாம்பவான், அங்கதன், அனுமான் முதலியோருடன் சென்று, இவனுக்கு இலங்காராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைப்பாய்," என்றார்.

அவ்வளவிலேயே பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டன. வள்ளுவர் முரசு முழக்கி, நகரெங்கும் விளம்பரஞ் செய்தனர். அதன்படி,

'தோரண வீதியும் தோமறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்பி,
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நட்டு,
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றி,

விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்பி'

நகர மாந்தர் நகரத்தை யலங்கரித்தனர். பல புண்ணிய தீர்த்தங்களிலிருந்து குடங்குடமாக அபிடேகத்திற்கு ஜலம் கொண்டு வந்தார்கள். நவரத்தின கசிதமாகிய கிரீட குண்டலங்களையும் சிங்காதனத்தையும் தேவர்கள் உவந்தளித்தார்கள்.

வேதமுறைப்படி விபீஷணனைத் தூயநீராட்டி, இராமரது ஆஞ்ஞைப்பிரகாரம் இலக்ஷ்மணன் தன் கையினுல், 'மங்கல கீதம் பாட, மறையொலி முழங்க, வல்வாய்ச் சங்கினங் குமுற, பாண்டில் தண்ணுமையொலிப்ப, தாவில் பொங்கு பல்லியங்கள் ஆர்ப்ப, விண்ணோர் பூமழைபொழிய வீடணனுக்கு முடி சூட்டினன்.

ஒரு கரியமலையானது சூரியனைத் தலையிலணிந்து ஜ்வலிக்கின்றதொரு ஆதனத் தமர்ந்தாற்போல, விபீஷணன் நவமணி குயிற்றி ஒளிரும் அரியணைமீது கோடி சூரியப்பிரகாசமான மணிமுடி தரித்து இந்திரன்போல இனிது வீற்றிருந்தான்.

"தேவர் பூமழை சித்தர் முதலினோர்
மேவு காதல் விரைமலர் வேறிலர்
மூவ ரோடும் முனிவர்மற் றியாவரும்
நாவில் ஆசி நறைமலர் தூவினர்."

சுபம்! சுபம்!! சுபம்!!!

Kesari Printing Works, Madras.

## எம் சொந்தப் பிரசுரங்கள்

| | | | |
|---|---|---|---|
| [கோ]பால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம்... | 0 | 2 | |
| [கோ]பால் புதியதமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் | 0 | 3 | |
| கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் | 0 | 4 | |
| கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் | 0 | 4 | |
| கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் | 0 | 6 | |
| ஆஞ்சநேயர். பண்டிதர் ம. குப்புசாமி முதலியார் எழுதியது ... ... ... | 0 | 5 | 0 |
| சிறுமணிக் கதைகள். எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது ... ... ... | 0 | 5 | 0 |
| கம்பர் அல்லது கவியரசு: பண்டிதர் ஆ. நா. கன்னையா எழுதியது ... ... | 0 | 5 | 0 |
| சிறுவர்களுக்கான இந்து தேச சரித்திரம்: வி. ஜயராம ஐயர், B.A., L.T., எழுதியது | 0 | 5 | 0 |
| விவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம்: S. சுப்பிரமணிய அய்யர், B.A. எழுதியது ... | 0 | 5 | 0 |
| கோபால் வாய்பாடு ... ... | 0 | 1 | 0 |
| எமாங்கதத் திளவரசன்: டி. என். சேஷாசலம், B.A., B.L., எழுதியது ... ... | 1 | 0 | 0 |
| புத்திமானே பலவான் (7-ஆம் பதிப்பு) எ. பரசுராமையர் எழுதியது ... ... | 0 | 10 | 0 |
| கிருஷ்ணதேவராயர் K. P. சேஷாத்திரி அய்யங்கார் எழுதியது ... ... | 0 | 8 | 0 |
| பகீரதன்:பண்டிதர் ஆ. நா. கன்னையா எழுதியது | 0 | 6 | 0 |
| பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன்: பண்டிதர் மே. வீ. வேணுகோபால் பிள்ளை எழுதியது | 0 | 6 | 0 |
| சூரவாதித்த சோழன் பண்டிதர் R. S. சாம்பசிவ சர்மா எழுதியது ... ... | 0 | 12 | 0 |
| இலங்கேசன் T. சீனிவாச ஐயர் எழுதியது ... | 0 | 6 | 0 |
| தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை பண்டிதர் கா. ரா. கோவிந்தராஜ முதலியார் எழுதியது... | 0 | 4 | 0 |
| முகுந்தன் திரு. மாணிக்க வாசகர் எழுதியது... | 0 | 6 | 0 |

## ENGLISH PUBLICATIONS

| | | | |
|---|---|---|---|
| **English Selections for Higher Forms.** By P. S. Sivaswami Aiyar, B.A., L.T. ... | 0 | 12 | 0 |
| **Nanda the Paraiah Saint** By C. S. Rangaswami Aiyengar, B.A., L.T. ... | 0 | 3 | 0 |
| **Fables from Mahabharata** By N. Paramasiva Iyer, B.A., L.T. ... | 0 | 3 | |

ஜி. பால் ... கம்பெனி, ஜி. டி. செ...